மூகாம்பிகை அம்மன்

தேவிதரிசனம் (VI)



வாழ்வில்
நம்பிக்கையூட்டும்
வியப்பான
வெளியீடுகள்

பொன். பாஸ்கரமார்த்தாண்டன்

தேவி தரிசனம்

(முகாம்பிகை அம்மன்)

பொன். பாஸ்கர மார்த்தாண்டன்

அம்பாள் பதிப்பகம்
48, ராம நாயக்கன் தெரு
நுங்கம்பாக்கம்
சென்னை-600 034

முதல் பதிப்பு: நவம்பர், 1981

தாமரை மணாளன் தயாரிப்பு

அட்டையை அலங்கரிக்கும்
மூகாம்பிகை அம்மன்
மூலஸ்தான வண்ணத்,
திருவுருவத்தை வரைந்து
உதவியர் ஓவியர் மணிவேல்.

விலை: ரூ 3

அச்சிட்டோர் : அன்னை அஞ்சுகம் அச்சகம்,
இராயப்பேட்டை, சென்னை-600014.

3-3

நானும் அவளும்

யார் இந்த அவள்?

வேறு யார்? என் அம்மா கொல்லூர் மூகாம்பிகைதான். வாழ்வை முழுமையாக ஆகர்ஷித்து அதில் தானே சங்கமித்து என் வாழ்க்கைப் பயணத்தில் பல திருப்பங்களை உருவாக்கிய லோக மாதா அவள். முக்கியமான திருப்பம்—அதுவும் நான் மிகவும் புனிதமான, நிறைவூட்டும் பணியாகக் கருதும் திருப்பம், என் அம்பாள் பதிப்பகத்தின் ஜனனம்.

இந்த அம்பாள் பதிப்பகத்தை கோடித்தவள், அஸ்தி வாரமிட்டவள், உருவாக்கியவள், அதைக் கோபுரமாக படிப்படியாக உயர்த்தியவள் எல்லாமே அன்னை மூகாம்பிகைதான்.

அதற்கு முன் அம்பாள் பதிப்பகம் உருவாவதற்குக் கிட்டத்தட்ட மூன்றரை ஆண்டுகளுக்கு முன்பே என் ஆன்ம நிறைவுப் பணியாக தேவி தரிசனம் கட்டுரைகளை எழுதத் தொடங்கிவிட்டேன். ஆனாலும் அதை நூல் வடிவில் தரவேண்டும் என்ற எண்ணமே எனக்கு ஏற்பட்டதில்லை. பல அன்பர்கள் அதைப் பற்றி என்னிடம் ஆலோசனை கூறிய போதும்கூட நான் அதைப் பொருட்படுத்தியதில்லை.

அதற்கு முக்கிய காரணம், நான் வியாபாரியில்லை. வியாபாரத்துக்கும் எனக்கும் வெகுதூரம். பதிப்பகம் என்பதில் இலாபம் என்பது வருகிறதோ இல்லையோ, குறைந்தபட்சம் நஷ்டம் வராமலாவது கண்காணித்து செயல்படுத்த வேண்டிய பணி. அதற்குத் துல்லியமான—தயவு தாட்சணியமில்லாத அழுத்தம் மனதில் வேண்டும். என்னிடம் இல்லாத ,எத்தனையோ விஷயங்களில் மிகப் பிரதானமானது இது. அதனாலேயே இந்தப் பதிப்பக வியாபாரத்திலிருந்து விலகி இயங்கிக் கொண்டிருந்தேன்.

ஆனால் அம்மா என்னை விடவில்லை. பல அன்பர்கள் தேவி தரிசன நூல்கள் தனித்தனியாக வந்தல் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்று தொடர்ந்து வலியுறுத்த ஆரம்பித்தார்கள். இந்தப் பணியை இன்னொரு திறமையான வியாபாரியிடம் ஒப்படைப்பதற்கும் எனக்குப் பிரியமில்லை. என்னுடைய நாவல்களையும், நாடகங்களையும், பிற இலக்கியப் படைப்புகளையும் இன்றும் வேறு பதிப்பகத்தினர் தாம் வெளியிட்டு வருகிறார்கள். ஆனால் இதை மட்டும் இன்னொரு வியாபாரத் திறமைசாலியிடம் விட விரும்பாத தற்கு முக்கிய காரணம், தேவி தரிசனம் கட்டுரைகளில் வெறும் எழுத்துக்களும், கருத்துக்களும் மட்டுமே இடம் பெற்றிருப்பதாக நான் கருதவில்லை. ஒவ்வொரு தலங் களிலும் என் அம்மா பராசக்தி என் உணர்வுக்களை சிலிர்த்து எழச் செய்து உருவாக்கிய ஆன்ம எழுச்சியும் அந்த எழுத்துக் களில் கலந்து சங்கமித்து நிற்பதாக உணர்கிறேன்.

அதனால்தான் அதை வெளியிடும் பொறுப்பை இன்னொரு வரிடம் ஒப்படைக்க விரும்பாத—கொஞ்சம் வேடிக்கை யாகச் சொல்லப் போனால் சிறு பிள்ளைத் தனமான பிடிவாதம் என் மனதில் அழுந்தப் பதிந்திருந்தது. சில அபூர்வப் பொருட்களை குழந்தை தன்னிடமே வைத்துக் கொண்டு இன்னொருவரிடம் அதைக் கொடுக்கத் தயங்குமே அப்படி...இன்னொருவரிடம் அந்தப் பொருட்களை ஒப்படைத் திருக்கலாம். அதில் ஒன்றும் பெரிய தப்பில்லை. அது தப்பில்லை என்பது அறிவு பூர்வமான எண்ணம். ஆனால் அதை இன்னொருவரிடம் கொடுக்க விரும்பாதது என் மனதிலுள்ள உணர்ச்சிபூர்வமான எண்ணம். 'சென்டி மென்ட்' என்று சொல்லுவோமே அது...

அதற்கு காரண காரியம் கிடையாது.

இந்த சென்டிமென்ட் காரணமாகத்தான் தேவி தரிசன நூல்களை வெளியிடுவதானல் நானே வெளியிடுவது...அல்லது வெளியிடாமல் இருப்பது என்று தள்ளிப் போட்டுக் கொண்டே இருந்தேன்.

அந்த சலனமான நிலைக்கு முடிவு கண்டவள் என் அம்மா மூகாம்பிகை...

தேவி தரிசனம் பகுதிக்காக மூகாம்பிகை அம்மனை தரிசிக்க கொல்லூருக்குச் செல்லும்போது ஒரு விவரம் புரியாத வேட்கை என் மனதில் இருந்தது. சொந்தமாக ஏதாவது ஒரு நிறுவனம் அமைத்து என்னுடைய அந்தரங்க உள்ளுணர்வுகளுக்கு ஒரு சுதந்திரமான வடிகாலாக சில பணிகளைச் செய்ய வேண்டும் என்ற தாகம்தான் அது.

ஆனால் இன்னது செய்ய வேண்டுமென்று தெளிவான முடிவுக்கும் வரவில்லை. அதற்கான திட்டமும் என் மனதில் தோன்றியிருக்கவில்லை. அம்மாவின் சன்னதியில் நம் எண்ணத்தை சொல்லிவிட்டு வந்துவிடுவோம். அவள் என்ன செய்ய என்னை இயக்குகிறாளோ அதையே செய்து விடுவோம் என்கிற மாதிரி ஒரு அழுத்தமில்லாத எண்ணம். இந்த உணர்வோடுதான் கொல்லூர் மூகாம்பிகை அம்மனைத் தேடி நான் பயணம் செய்து கொண்டிருந்தேன்.

என்னுடன் அப்போது இதயம் பேசுகிறது ஆசிரியரும், என் அருமைச் சகோதரருமான திரு மணியன் அவர்களும், அவர் குடும்பத்தாரும் கலந்து கொண்டிருந்தனர். எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தோம். என்னையறியாமலேயே எவ்வித முன் திட்டமுமின்றி 'பளிச்சென்று' ''அம்மா பராசக்தி பேரால் அம்பாள் பதிப்பகம் என்று பெயரிட்டு ஒரு பதிப்பகத்தை ஆரம்பித்து அதன் மூலம் தேவி தரிசனக் கட்டுரைகளை தொகுத்து ஒரு தலத்துக்கு ஒரு நூலாக வெளியிட்டால் என்ன என்று தோன்றுகிறது'' என்று திரு. மணியனிடம் கூறினேன்.

அவரும் 'பளிச்'சென்று, ''ரொம்ப நல்ல திட்டம், இதைச் செய்யுங்கள்'' என்று உற்சாகமாகக் கூறினார்.

அந்தக் கணத்திலிருந்து அம்பாள் பதிப்பகத் திட்டம் விசுவரூபம் எடுத்தது. பயணம் புறப்படும் முன்பு துளிகூட

சிந்தித்தறியாத என் மனதில் அப்படியொரு எண்ணத்தைப் அழுத்தமாகப் போட்டு, என்னைத் தீவிரப்படுத்தியது. அன்னை மூகாம்பிகையைத் தவிர வேறு யாரும் இல்லை என்று பரிபூர்ணமாக நான் நம்புகிறேன்.

அந்த நம்பிக்கையோடுதான் அன்னையின் சன்னதியில் வணங்கி நின்றபோது அம்பாள் பதிப்பகத் திட்டத்தை அன்னையின் சன்னதியிலேயே கூறி அவள் கருவறையில் ஒரு விளக்கையும் ஏற்றி வைத்து, குங்கும அர்ச்சனையும் செய்து வைத்து, 'தாயே, என் மனதில் இப்படியொரு எண்ணத்தை உருவாக்கியது நீதானென்றால், இதை செயல்படுத்தவும், வளர்க்கவும் கடமைப்பட்டவளும் நீதான். எல்லாம் உன் பொறுப்பு' என்று எல்லாப் பொறுப்புகளையும் அவள் பொற் பாதத்தில் சமர்ப்பித்துவிட்டு அந்த வினாடியிலேயே அம்பாள் பதிப்பகத் திட்டத்தையும் நான் மறந்து விட்டேன்.

அப்படி நான் மறந்து விட்டதற்கும் நியாயமான லௌகிக காரணங்கள் உண்டு. அந்த திட்டத்தை திடுமென எடுத்து செயல்படுத்துவதற்கு தேவையான நம்பிக்கையான ஆள் பலம், அத்தியாவசியமான லௌகிகத் தேவைகள் எதுவும் என்னிடம் ஆயத்தமாக இல்லை. நம்பிக்கையான ஆள் பலம் என்று நான் குறிப்பிட்டதற்குக் காரணம், என்னால் இந்தப் பணியில் முழுமையாக முழுநேரம் கவனம் செலுத்த முடியாது. நான் முழுக்க முழுக்க இதயம் பேசுகிறது பத்திரிகையில் முழுமையான கவனத்துடன் செயல்பட வேண்டியவனாக இருக்கிறேன். இந்நிலையில் என் சொந்த பதிப்பகத்திற்காக சிந்தனை பூர்வமான வழி காட்டுதல் மட்டுமே என்னால் செய்ய முடியுமே தவிர, அதில் முழுமையாக நம்பிக்கைக்குப் பாத்திரமாக நிர்வகித்து வளர்த்து, அதை நேர்ப்படுத்த எனக்குத் தக்க ஆள் பலமும் அத்தியாவசியமாகத் தேவைப்பட்டது. அது உடனடியாக என் கண்ணோட்டத்தில் தென்படாததால் இந்தத் திட்டம் உடனடியாகச் சாத்தியமில்லை என்ற முடிவுக்கு வந்தேன்.

ஆனால் உலகில் எந்தத் திட்டம்தான் மனிதனின் நிர்ணயத்தில் இருக்கிறது? திட்டமிட வேண்டியவள் என் அம்மா லோகமாதா அல்லவா? நான் செயலற்று, மன தளவில் கைவிட்ட திட்டத்தை அம்மா மூகாம்பிகை தன் செந்தாமரை திருக்கரங்களால் ஏந்தி செயல்படுத்தத் திருவுளம் கொண்டுவிட்டாளோ என்னவோ? நான் ஆலய தரிசனம் முடித்து சென்னைக்குத் திரும்பிய ஒரே வாரத் திற்குள் அந்தத் திட்டத்திற்கு பிரகாசமான பிள்ளையார் சுழி விழுந்தது.

என்மீது உயிரார்ந்த கனிந்த அன்பு கொண்ட ஒரு புனித அன்பர்—தெய்வம் மனித உருவில்தான் நம்மிடம் நெருங்கி அருள் புரியும் என்பதை நிருபிப்பது போல்—என்னிடம் அந்தத் திட்டத்தைப் பற்றி விவாதித்ததோடு, ''தைரியமாக அந்தப் பணியில் ஈடுபடுங்கள். அது சம்பந்த மான அத்தனை பொறுப்புகளையும், நான் நிறைவேற்றித் தருகிறேன். என்னைச் சேர்ந்தவர்கள் எல்லாருமே இனி உங்களைச் சேர்ந்தவர்கள். உரிமையோடு, உறவோடு உங்கள் அருகில் துணை நிற்போம். இந்தப் பொறுப்பை அம்பாளின் பலத்தோடு நாம் இணைந்து ஏற்றுச் செயல்படுவோம்'' என்று கூறியதோடு மளமளவென்று அனைத்து ஆயத்த ஏற்பாடுகளையும் தாமே செய்து பதிப்பகத்திற்கு ஆரம்ப பூஜைக்குக்கூட நாளும் குறித்து விட்டார்.

நான் பிரமித்துப் போனேன். நான் முயன்று எவ்வளவு துரிதமாகச் செயல்பட்டாலும், அத்தனை வேகத்துடன் காரியங்களை செயல்படுத்தியிருக்க முடியாது. அம்பாளை தரிசித்து வந்த ஒரு மாத காலத்திற்குள் அந்தக் கொல்லூர் மூகாம்பிகையின் கட்டுரையே எழுதி முடிவதற்கு உள்ளாகவே அவள் சன்னதியில் நான் கோரிக்கை விடுத்த அந்தத் திட்டத்தை அவள் நிறைவேற்றி வைத்துவிட்டாள்.

ஆயிற்று. இதோ, அது தொடங்கி ஏழு மாதத்திற்குள் தொடர்ந்து ஏழு நூல்கள் வெளியிட்டாயிற்று. அன்பர் களின் ஆதரவும், படிப்படியாக நாளுக்கு நாள் பெருகி வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இதைப் பார்த்து பரவசப்

பட்டு பிரமித்து நிற்கிறேன், நான். அதில் பெருமைப்பட வேண்டியவள் என் அம்மா மூகாம்பிகைதான். ஆமாம். அது அவள் தொட்ட பணி. இட்ட அருள் பிச்சை.

இதனால்தான் சொன்னேன். அம்மா மூகாம்பிகை என் வாழ்வில் ஒரு அபூர்வ திருப்பத்தை உருவாக்கியவள் என்று. அவள் இப்படி பல அன்பர்களின் வாழ்விலும், பல அற்புதத் திருவிளையாடல்களை, வாழ்வில் மேம்படுத்தும் திருப்பங்களை உருவாக்கியிருக்கிறாள் என்று பலர் சொல்லி இருக்கின்றனர். அவற்றில் என்னால் முடிந்த அளவு இந்த நூலில் தொகுத்தளித்திருக்கிறேன்.

இந்நூலை வாசிக்கும் பேறு பெற்றிருக்கும் அன்பர்களும் என் அம்மாவின் அருள் கருணைக்குப் பாத்திரமாகி ஆன்மீக, லௌகிக மேம்பாடுகளை அடைய அவள் அருள் புரிவாள் என்ற உறுதியான நம்பிக்கை எனக்குண்டு. அவளுடைய அளவிலா அருளை ஒரு அணு அளவாவது புரிந்து கொள்ள இச்சிறு நூல் பயன்பட்டால் அதுவே நான் பெற்ற பேறாகும்.

எல்லாமாய் நின்றவளே ஏகத் திருமகளே!
அல்லல் ஒருகோடி ஆற்றவொணா வல்வினைகள்
நில்லென்று ஒருசொல்லால் நீக்கியருள் சுரக்க
கொல்லூரில் நிலைகண்ட கோமகளே மூகாம்பிகே!
பாதைகள் நூறு உண்டு, பாவங்கள் சேர்ந்திடவே,
வாதைகள் கோடி உண்டு, வாழ்வதனில் குவிந்திடவே
சோதனை நீக்கியல்லோ சுகநிலை கண்டிடவே
வேதத்தாய் அம்பிகையே, வேறுண்டோ நின்
பாதமல்லால்!

—மூகாம்பிகைபாமாலை

அன்பன்
பொன். பாஸ்கர மார்த்தாண்டன்
தாமரைமணாளன்

5. **தணிகைக் குமரன்**
(குமரக் கடவுள் போற்றிய பாமாலே, கும்மிகள் அடங்கியது) ரூ. 0 75

6. **இனிய இல் வாழ்க்கை**
—இருபது முதல் அறுபது வரை—
சில இரகசியங்கள்
(எழுதியவர்: ஸௌந்தர்யா) ரூ. 3 00

7. **ஆவி உலக அனுபவங்கள்**
(ஆவியுடன் பேசும் முறை—ஓர் ஆவியின் நேரடிப் பேச்சு தகவல்—உள்பட) ரூ. 3 00

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு. கழிவு நீக்கி முன்பணம் அனுப்ப வேண்டும். தனிப்பிரதி வேண்டுவோர் பத்திரமாகப் பதிவுத் தபாலில் பெற நூல் விலையுடன் தபால் செலவுக்காக ரூ. 2. 50 சேர்த்து அனுப்பவும்.

அம்பாள் பதிப்பகம்
48, ராம நாயக்கன் தெரு,
நுங்கம்பாக்கம்,
சென்னை-34

அசுரனை அடக்கிய அம்பிகை

வல்வினைகள் மாய்த்திடவே சொல்லரிய சத்தியமாய்
கொல்லூரில் கொலு அமர்ந்த கோமாதா,
மூகாம்பிகே!

1

அம்மம்மா!

என் எளிய கால்கள் என்ன தவம் செய்து விட்டன!

இயற்கையன்னை தன் எழில்களெல்லாம் திரளச் சூழ்ந்து அன்னை பராசக்தியை ஏற்றிப் பணிந்து நிற்கும் அந்த அற்புதத் திருத்தலத்தையா தொட்டு வழிபடும் பாக்கியம் நம் கால்களுக்குக் கிடைத்து விட்டது!

அஞ்ஞான உலகுக்கு மெய்ஞ்ஞான ஒளிகாட்ட காலடியில் அவதரித்த ஞானவள்ளல் ஜகத்குரு ஆதிசங்கர பகவத் பாதாளின் பொன்னுனை காலடி பட்ட அந்தப் புனித மண்ணையா நான் தரிசித்துக் கொண்டிருக்கிறேன்!

அந்தப் புனித மஹான் தன் அருட் பெட்டகமான 'ஸௌந்தரிய லஹரி'யை எந்தத் திருத்தலத்தில் — எந்த மகா சக்தியின் சந்நிதியில் முதன்முதலாகப் பாடினுரோ, அந்த மகிமை பெற்ற கொல்லூர் மூகாம்பிகை திருச்சந்நிதியில் தொழுது நிற்கும் பாக்கியமா எனக்குக் கிட்டிவிட்டது!

மாந்தரின் அஞ்ஞான உள்ளத்தில் மண்டிக் கிடக்கும் மூடத்தனத்தைச் சுட்டெரித்து அருள் வழங்கியருளுவதால் எந்தத் தலத்தில் மூகாம்பிகை என்று பெயர் பெற்று அன்னை பராசக்தி திகழ்கிருளோ அந்த சந்நிதியிலா நான் தொழுது நிற்கிறேன்.

மகா மகிமை பெற்ற ஜோதிர்லிங்கத்தில் தன் அளப்பரிய மகா சக்தியை வியாபிக்கச் செய்து— அனைத்து மூர்த்திகளையும் தன்னுள் அடக்கி அனாதியான பரம்பொருளாய், பிரணவநாயகியாய், ஓங்கார தத்துவத்தின் சத்திய ஒளியாய் சர்வ வல்லமையாய், தானே பரம்பொருளாகி, மகாவீரிய நாயகியாய் மூகாம்பிகை என்னும் நாமம் மணக்க, எத்தலத்தில் என் ஆதிபராசக்தி கொலு வீற்றிருக்கிறாளோ, அந்தத் தலத்தையா நான் தரிசித்துக் கொண்டிருக்கிறேன்!

துவாபரயுகம் தொட்டு இன்று வரை எந்தத் தலத்தில் மாந்தர்கள் தம் வல்வினைகள் போக்கி — எண்ணிய கருமம் யாவற்றையும் முடிக்க அருள் பெறுகிறார்களோ—

இன்றும் எந்தத் தலத்தில் அருட் சித்தர்கள் தாயின் அருளைப் பெற்று, தன் வல்லமை வீரியசக்திகளை வரசித்தியாக்கித் கொள்கிறார்களோ—

கலைஞர்களுக்கும், சிற்பிகளுக்கும், புலவர்களுக்கும், ஆதர்சமாக கலைவாணியின் அம்சமாய் ஞான சாம்ராஜ்யாதிபதியாய் எந்த மகா தலத்தில் அம்பிகை அருட்கோயில் கொண்டிருக்கிறாளோ—

அனைத்துக்கும் மேலாக, வேறு எந்தத் தலத்திலும் அமையா அற்புத அருள் மையமாக, சகல தெய்வங்களும் சக்தியைப் பிரதானமாக கொண்டு இணைந்திருக்கும் 'ஸ்வர்ண ரேகை மின்னும் ஜோதிர்லிங்கத்தைக் கொண்டு, எந்த சந்சந்நிதியில் சதாசர்வ காலமும் அருள் சுரந்து, வேண்டுவோருக்கு வேண்டும் வரமளிக்க பராசக்தியான மூகாம்பிகை எழுந்தருளியிருக்கிறாளோ—

அந்தச் சந்நிதியில்:— அந்த மகிமை பெற்ற லோக மாதாவின் சந்நிதியில் தொழுது நிற்கிறோம்...

ஃ ஃ ஃ

வேத காலம் தொட்டு அந்தத் திருத்தலத்தில் அம்பிகை நடத்திய அற்புதங்களை - ஆதிசங்கர பகவத்

பாதாளின் மூலமாக அன்னை நிலைபெறச் செய்திருக்கும் அபார சக்திகளை நினைத்துப் பார்க்கிறோம்...

அதோ... வேதகாலம் நம் மனக்கண்கள் முன் விரிகிறது...

வானுயர்ந்து இயற்கையின் வல்லமைக்கும் வனப்புக்கும் இலக்கணமாய் மூலிகைகளின் மணம் கமழ எழுந்து நிற்கிறது, குடசாத்தரி மலை... மேற்கே பரத கண்டத்தின் அரணான குடவரை... சுற்றிலும் இவ்விரு பெருமலைகளின் தொடர்ச்சியான குன்றங்கள்...

'மஹாரண்யம்' எனும் பெயர் பெற்ற இந்த மலையிவ் மனோகர வன பூமியில் மடியில்... புனிதமான சௌபர்ணிகை யாற்றின் தீரத்தில்... அருட்தலத்தில் ஆழ்ந்திருக்கிறார் மகாயோகியான கோல மகரிஷி.

உலக நலனுக்காக உத்வேக ஞான வேட்கையுடன் தவமியற்றிக் கொண்டிருந்த அவர் முன் பரமேசுவரன் தோன்றுகிறார்.

''சுவாமி, உலகம் உய்ய யான் இயற்றும் தவத்துக்குப் பயன் தருக!'' என்றுதுதிக்கிறார் மகரிஷி.

''இப் புண்ணிய திருத்தலம் சர்வ வல்லமைகளுக்கும் மூலமான பராசக்தியால் மகிமை பெறவிருக்கிறது. எனவே அம்பாளை நோக்கி தியானம் செய்க!'' என்று உபதேசித்ததோடு—

அவ்வமயம் அங்கு சுயம்புவாய் உருவான அற்புத சக்தி பெற்ற ஜோதிர்லிங்கத்தின் வல்லமை மிக்க ஸ்ரீசக்கரத்தை எழுந்தருளச் செய்து,

''கோல மகரிஷியே, இத் தலத்தில் ஆதிபராசக்தி, மகாலட்சுமியின் உருவில் காட்சியளிப்பாள். அத் தேவியின் சந்நிதியில் இந்த ஜோதிர்லிங்கம் சர்வ சதா காலமும்— யுக யுகாந்திரங்களைக் கடந்தும் சக்தி பெற்றதாய் — அண்டி

'வழிபடுவாருக்கு அருள் சுரப்பதாய் அமையும்!'' என்று திருவருள் புரிந்தார்.

அதன்படி கோல மகரிஷி அம்பாளைத் தியானித்து அகோரதவத்தில் ஆழ்ந்தார்.

அவர் அவ்வாறு தியானத்தில் ஆழ்ந்து தேவியைத் தேடிக் கொண்டிருந்தபோது,

மகாவீரியத்துடன் சக்தி தேவி அங்கு பிரசன்னமாக வேண்டிய ஓர் அவசியத்தையும் அவசரத்தையும் இன்னொருவன் உருவாக்கினான்...

அவன்தான் கம்ஹாசுரன்...

2

தெய்வீகத் தவமணம் கமழும்,
—அந்த குடசாத்திரி மலை,
—அந்த சௌபர்ணிகையாறு,
—அவற்றின் மனோரம்மிய சாரல்கள், தீரங்கள்...

இவை யுகயுகாந்திரமாய் எத்துணை அரிய அற்புதங்களுக்குக் களமாய்; எத்தனை எத்தனை அற்புத மகான்களின் பொற்பாதங்கள் பட்ட புனிதநிலமாய் திகழ்ந்திருக்கின்றன!

அந்த விண்ணூர்ந்த குடசாத்திரி மலையின் அடியில் அன்னை முகாம்பிகையின் சந்நிதியில் நின்று வியக்கிறோம்.

அங்கேதான் சத்தியத்தை மூக (ஊமை) நிலைக்கு உள்ளாக்க முயன்ற மூர்க்கவெறிகளை அடக்கி அன்னை பராசக்தி மூகாம்பிகையாக திருநாமம் பெற்று தன் அருள் சாம்ராஜ்யத்தை நிலைநட்டினாள்!

அந்த அடர்ந்த பசுமை செழித்த மலைச்சாரலில் இயற்கைதேவியின் சதங்கையொலிபோல் இனியநாதம் எதிரொலிக்க ஓடிக்கொண்டிருக்கும் சௌபர்ணிகையாற்றுக்

கரையில்தான் ஒரு குடிலை அமைத்துக் கோலமகிரிஷி உலகம் உய்யத் தவம் இயற்றிக்கொண்டிருந்தார் (அவர் பெயரால் தான் அத்தலம், 'கோலாபுரம்' என்று அழைக்கப் பெற்று, இப்போது, 'கொல்லூர்' என்று மருவியிருக்கிறது.)

அவர் அமைதியாக தவமியற்றிக் கொண்டிருந்த சமயத்தில்தான், ஒருநாள் சக்தியின் அம்சமான கால பைரவியின் அருளைப் பெற்ற கம்காசுரன் என்ற மூர்க்க அரக்கன் அத்தலத்தைக் கண்டு, அதன் இயற்கையழகில் மயங்கி, தானும் தன் பரிவாரங்களுடன் அங்கேயே தங்கினான்.

அவன் அங்கு தங்கியது முதல் அவ்வெல்லைகளில் நிறைந்திருந்த அமைதியும், பவித்திரமும் அழியத் தொடங்கின.

மகாவரப்பிரசாதியும், வலிய சக்திகளும் கொண்ட கம்காசுரன் உள்ளத்தால்மட்டும் இருள் நிறைந்தவன். அதீத வரங்களைப் பெற்ற அவனால் உலகுக்கு நன்மைகள் கிட்டுவதற்குப் பதிலாக தீமைகள்தான் சம்பவிக்கத்தொடங்கின. அகங்காரமும், மூர்க்கத்தனமும் கொண்ட அவன், எளிமையாக தவம் செய்த கோலமகிரிஷியை பலவகையிலும் துன்புறுத்தி அவருக்குத் தொல்லையளிக்கத் தொடங்கினான்.

அவனுடைய உபத்திரவங்கள் தாள முடியாமல் கோலமகிரிஷி குடசாத்திரி மலையில் உள்ள குகை ஒன்றிற்குச் சென்று ஒளிந்திருந்து தவத்தைத் தொடர்ந்தார்.

கம்காசுரனின் லீலைகள் மானிடர்களையும்-ரிஷிகளையும் மட்டுமல்லாது, விண்ணவர்களையும் பாதிக்கத்தொடங்கின.

அவனால் விளைந்த துன்பம் தாளாத தேவர்கள் மும்மூர்த்திகளிடம் சென்று முறையிட்டனர்.

ஆனால் மும்மூர்த்திகளோ, கம்காசுரனை அழிப்பது தம் சக்திக்கு அப்பாற்பட்டது என்பதை உணர்ந்தனர். காரணம், கம்காசுரன் அன்னை பராசக்தியின் ஓர் அருள் அம்சமான காலபைரவியின் அருள் பெற்றவன். 'அம்பிகையின் அருள் பெற்றிருந்த அவனை ஒடுக்கும் சக்தி

அம்பிகைக்கே உண்டு' என்று உணர்ந்த மும்மூர்த்திகள் ஆதி பராசக்தியை வேண்டி, அம்பாளின் இன்னோர் அம்சமான திரிபுரபைரவியை கம்காசுரனை ஒடுக்க அனுப்பினர்.

குடசாத்திரி மலை நோக்கி திரிபுரபைரவி வரும் செய்தி யறிந்த கம்காசுரன், தன் இருப்பிடத்திலிருந்து தப்பி ஓடி வேத மந்திரங்கள் நறுமணமாய் கவிந்திருக்கும் ரிஷியமுகா சலம் என்ற மலையைச் சென்றடைந்தான்.

அந்த வேதசாரம் கமழும் மலையில் திரிபுரபைரவி தன் அழிவுப் பணியில் ஈடுபட மாட்டாள் என்ற நம்பிக்கை கம்காசுரனுக்கு.

ரிஷியமுகாசலத்தில் ஒளிந்திருந்த கம்காசுரன் அங்கிருந்து அகோரமாய் பிரும்மாவை நோக்கி இறவா வரம் கேட்க தவமியற்றத் தொடங்கினான். அவனுடைய அதி தீவிர தவ வலிமையைக் கண்டு-தேவாதி தேவர்கள் எல்லாரும் நடுங்கினர்.

அவனுடைய தவ மகிமைக்குக் கட்டுப்பட்டு பிரும்மா காட்சியளித்துத்தான் திருவார்; சத்திய நெறிப்படி அந்த தவத்தின் கனியாக அவன் கேட்ட வரத்தை பிரும்மா கொடுத்துத்தான் தீரவேண்டும். அவ்வாறு பிரும்மா இறவா வரம் அவனுக்கு அளித்துவிட்டால், திரிலோகங் களும் அவனால் பெரும் உற்பாதங்களுக்கும் தொல்லை களுக்கும் உள்ளாகி அவதியுறும் என்ற நிலை உருவாகியது.

இதைத் தெளிவாக உணர்ந்த தேவாதிதேவர்கள் இந்தப் பேராபத்திலிருந்து அனைத்துலகையும் மீட்கும் வல்லமை அந்த ஆதிபராசக்தி ஒருவளுக்கே உண்டு என்பதை உணர்ந்து, அம்பிகையின் பொற்பாதம் பற்றி முறையிட்ட னர்.

''அம்மா! உன் அருள் பெற்ற கொடியவனை உன்னால் தான் ஒடுக்க முடியும்'' என்றனர்.

''தேவர்களே! ரிஷியமுகாசலத்தில் கம்காசுரன் தவம் செய்து கொண்டிருப்பதால் அந்த புனிதமலை மாசு படும்படி

அங்கே வைத்து அவனை ஒடுக்கி அழிப்பது அறத்துக்கு விரோதம்'' என்ருள் அம்பிகை.

''அம்மா, அவன் அறங்களையே அழித்துக்கொண்டிருக்கிருன். தாங்கள் தலையிடாவிட்டால் தர்மதேவதை தங்கியிருக்க இந்த திரிபுவனங்களிலும் ஒரு சாண் இடம்கூட இல்லாத நிலை ஏற்பட்டுவிடும். அவன் பெறவிருப்பதோ 'சாகா வரம்.' அதை அவன் பெற்றுவிட்டால் நிரந்தரமாக இந்த பூமண்டலத்தில் அஞ்ஞான இருள் பதிந்துவிடும். அக்கிரமங்கள் மலிந்துவிடும். உலகக்ஷேமத்துக்காகத் தாங்கள்தான் அருள் புரிந்தாக வேண்டும்!'' என்று அம்பிகையின் பாதம் பற்றி தொழுதனர் தேவர்கள்.

அன்னை திருவுளம் கொண்டு, உலகைக் காத்தருள்வதாக வாக்களித்தாள்.

அச்சமயம் ரிஷியமுகாசல மலையில்-கம்காசுரனின் தவம் கனியும் நேரம் நெருங்கியது. அந்த மலையே அவனுடைய உச்சித் தவ நெருப்பால் கணகணத்து நின்றது. அந்தப் பக்தி உக்கிரம் பிரும்மதேவனை அசைத்தது.

அக்கணமே கம்காசுரனுக்கு வரமருள் ரிஷியமுகாசல மலையில் பிரசன்னமானுர் நான்முகன்.

''கம்காசுரா, உன் தவத்தைக் கலைத்து விழித்தெழு! நீ வேண்டும் வரத்தை அளிக்க யாம் வந்திருக்கிருேம்'' என்று பிரும்மதேவன் கனிந்துரைக்க

ஆனந்தம் பொங்க ஆர்ப்பாரித்து எழுந்து தொழுதான் கம்காசுரன்.

'அடுத்த கணம் அவன் வரத்தைக் கேட்டுவிடுவான்... அவன் கேட்டபடி இறவாவரத்தை நான்முகன் அளித்துவிடுவார்' என்ற நிலையில் அம்பிகை அரூபமாய் பிரவேசித்து, வரம் கேட்கவிருந்த அசுரனின் நாக்கை அசையவிடாத வண்ணம் செய்து, அவன் குரலையும் முடக்கி அவன் வாயினுள் அமர்ந்துவிட்டாள்!

அந்த விநாடியே அசுரன் தான் நினைத்ததை வாய் விட்டுக் கேட்க முடியாதபடி ஒரு 'மூகன்' ஆனான். (ஊமை யானான்).

தன் நாவை அசைக்கக் கம்காசுரன் எவ்வளவோ முயன்றும் அம்பிகையின் சக்தியால் அவன் நாவு அசைய வில்லை.

5

எண்ணம் போல்' வாழ்வு என்பார்கள்.

எந்த எண்ணங்கள்?

உயர்ந்த எண்ணங்கள்தாம்! அந்த உயர்ந்த எண்ணங் கள் தெய்வத்தால் ஆசீர்வதிக்கப்படும்போது, அந்த எண் ணத்தின்படி நமக்கு வாழ்வு கிடைக்கிறது.

சிலசமயம் நாம் உயர்வாகக் கருதும் உயர்ந்த எண்ணங் களின்படி நமக்கு வாழ்வு அமைவதில்லை.அது ஏன்...?

அந்த எண்ணங்கள் உண்மையிலேயே உயர்வான வையா, உண்மையிலேயே அது நன்மை பயப்பதா—என்ற விஷயத்தை முடிவு செய்வது நாம் அல்ல; தெய்வம்.

இப்படித்தான் கம்காசூரனின் எண்ணமும், தேவதேவி யான பரமேஸ்வரியால் நீதிப் பரிசிலனைக்கு உட்படுத்தப் பட்டு, நிராகரிக்கப்பட்டது.

இத்தனைக்கும் கமகாசூரன் கால பைரவி என்ற தேவி யின் அம்சமான ஒரு பிராட்டியின் பக்தன். இருந்தும், அவன் எண்ணத்தின்படி அவனுக்கு இறவாத வரம் அளிக்கப் படுவதற்கு அம்பாளின் அனுக்கிரகம் இல்லை. காரணம், அவன் இறவாத வரம் பெற்று விட்டால், அவனுடைய தீயச்செயல்களும் சிரஞ்சீவியாகி, உலகில் நிரந்தரமாய் நல்லோர் துன்பப்பட நேரிடும். அதனால்தான் கம்காசூரன் பிரும்மனிடம் பேச முடியாதவாறு அவன் நாவில் ஒரு தடையாக அமர்ந்து விட்டாள் பரமேஸ்வரி.

தன் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த கொடிய எண்ணத்தையும், அழிவுப் பேராசையையும் அப்போது வார்த்தைகளால் வெளிக்கொணர முடியாமல் தவித்து, பிரும்மதேவன்முன் செயலற்றுப் போனான் அசுரன்.

ஆம்! அவன் கொடிய எண்ணத்தைத் தடுக்கும் நெடிய அரணாக அங்கே அம்பாள் நின்று உலகத்தை ஆட்கொண்டாள்.

கம்காசூரன் வரம் எதுவும் கேட்காததால் பிரும்ம தேவன் வரமளிக்காமல் மறைந்து விட்டார். (அப்படி உலகை அந்த அழிவிலிருந்து காக்க, அந்தக் கொடியோனை மூகனாக்கி அருள் சுரந்ததால் அத்தலத்தில் அம்பிகை மூகாம்பிகையாக திருநாமம் பெற்றாள்.)

அத்துடன் அன்னையின் பணி அங்கு முடிவுறவில்லை. காரணம், தன் எண்ணங்கள் சிதைந்ததால் ஆவேசத்துக்குள்ளாகிய கம்காசூரன் அடங்காப் பெருங்கோபம் கொண்டான். தேவாதி தேவர்கள்தாம் தன் தோல்விக்குக் காரணம் என்பதை உணர்ந்த அவன், மூர்க்காவேசம் கொண்டு, மூவுலகத்தையும் தொல்லைப்படுத்தத் தொடங்கினான்.

அப்போது மும்மூர்த்திகளே அவனை எதிர்க்க முடியாது சோர்ந்து நின்றார்கள். மீண்டும் சர்வலோக நாயகியான ஆதிபராசக்தியே உலகத்தை ரட்சிக்க முன்வந்தாள்.

அவள் ஒருவளால் மட்டுமே அது அப்போது சாத்தியமாக இருந்தது. ஏனென்றால், அவளே சக்திகளின் மூல ஊற்று, மும்மூர்த்திகளும், தேவர்களும் அவளிடமிருந்தே சக்தியைப் பெறுகின்றனர். தீமை பிரளயப் பெரும் வெறியுடன் எதிர்த்து நிற்கும்போது அதை நசுக்க அந்தச் சர்வ வல்லமையான லோகமாதாவால்தான் முடியும்.

சகல மூர்த்திகளின் வல்லமைகளையெல்லாம் கொண்டவளாய் பேருருவம் கொண்டாள் அம்பாள். பிரும்மா,

விஷ்ணு, இந்திரன், எமன், சிவன், ஆறுமுகன் ஆகியஆறு மூர்த்திகளும் அம்மையின் சக்திப் பேருருவுக்குள் சங்கமி தனர்.

அந்த வல்லமை பெற்ற அரிய சக்தித் திறனுடன் அம்பாள் கம்காசூரனை நேரடியாகவே எதிர்த்துப் போரிட்டாள். அருளும், சக்தி ஆவேசமும் அன்னையின் உருவில் வெளிப்பட்டதும், அந்தப் புனித நீட்சண்யத்தின் முன் எதிர் நிற்க முடியாமல் பாவங்களின் உருவமாகத் திகழ்ந்த கம்காசூரன் செயலற்று வீழ்ந்து அழிந்து விட்டான்.

துஷ்ட நிக்ரகம் செய்து தூமணிச் சுடராய் அன்னை வெற்றிச்சங்கம் ஊதி நின்ற விழாக்கோலத்தைக் கண்டு விண்ணவரும், மண்ணவரும் ஜெயமங்கள கோஷங்களோடு ஆர்ப்பரித்து அன்னையைத் துதித்து, ''அம்பிகையே, நீ என்றென்றும் இத்தலத்திலேயே உன்னுடைய சர்வசக்தி வல்லமைகளுடன் எழுந்தருளி உலகுக்கு அருள் புரிய வேண்டும்'' என்றனர்.

அன்னையும் மனமிரங்கி, தன் அனைத்து சக்திகளையும் அங்கே கோல மகரிஷி கண்டெடுத்தது வணங்கி வந்த சுயம்புலிங்கத்தினுள் இறக்கி, அந்த அற்புத ஜோதிர் லிங்கத்தை மகா வரப்பிரசாத பீடமாக்கி அருள் புரிந்தாள்.

அன்று அகிலாண்டேஸ்வரி தன் உச்சித சக்தியுடன் கலந்துவிட்ட ஜோதிர்லிங்கம்தான் யுகயுகாந்திரங்களைக் கடந்து இன்றும் வீரிய நீட்சண்யத்துடன் கொல்லூர் மூகாம் பிகை சந்நிதியில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது.

அந்த அற்புத ஜோதிர்லிங்கத்தை தரிசிக்கும் பாக்கியம் பெறும் நாள் நம் தீவினைகளெல்லாம் அழியும் நாள். அந்த லிங்கத்தைப் பக்தர்களுக்காகக் கண்ணாடி ஒளி பாய்ச்சி தரிசிக்கச் செய்கிறார்கள், ஆலயத்திலுள்ள குருக்கள். (அத்தலத்தை தரிசிக்கச் சொல்லும் பக்தர்கள் அனைவரும் தவறாது குருக்களிடம் கேட்டு, சொர்ணரேகை மின்னும்

அந்த ஜோதிர்லிங்கத்தை தரிசிக்க வேண்டுமென்று கோருகிறோம்.)

அந்த ஜோதிர்லிங்கத்தை, அதன்மேல் ஒடும் சொர்ண ரேகை இரு பாகங்களாகப் பிரிக்கிறது. அளவில் பெரியதாக அமைந்த இடப்பாகமே சக்தி பாகம் என்று போற்றப் படுகிறது. சிறிய வலதுபாகம் சிவபாகமாகும்.

சக்தி பாகத்தில் மகா காளி, மகாலெட்சுமி, மகா சரஸ்வதி மூவரும் அமர்ந்து அருள் புரிகின்றனர். சிறியதான சிவபாகத்தில் பிரும்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் உள்ளடங்கியுள்ளனர்.

அன்னை மூகாம்பிகை கொல்லூர் தலத்தில் கலைவாணியான சரஸ்வதியின் அம்சத்தைக் கொண்டு பல்வேறு கலைஞர்களுக்கும், சித்தர்களுக்கும், முனிவர்களுக்கும் ஆதர்சமாகத் திகழ்கிறாள் என்பதை உறுதிப்படுத்த ஆலய குருக்கள் ஒருவர் ஒரு செய்தி கூறினார்.

சில வாரங்களுக்கு முன்னால் பூஜை வேளையின்போது அன்னையின் சந்நிதியில் துவஜஸ்தம்பத்தின் அருகே தரையில் முட்டி முட்டி வாய்விட்டு அலறிக் கொண்டிருந்தாராம் ஒரு துறவி: அருகிலிருக்கிறவர்கள், ''ஏன் சாமி இப்படி முட்டி அழுது கொண்டு இருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்களாம்.

அப்போது அந்தத் துறவி கண்ணீர் மாறாமலேயே, ''இந்த அம்பாளின் கருணையினாலே இந்த சந்நிதியிலே பல சித்து வேலைகள் எனக்கு சித்தியாகியிருந்தன. அம்பாளை நினைத்து நான் யாரைத் தொட்டாலும் அவர்களுடைய பிணி நீங்கி விடும். இப்படி ஒரு சக்தியைக் கொடுத்திருந்தாள். ஆனால் என் மமதையினால் எல்லாவற்றையும் போக்கிக் கொண்டேன். திடீரென்று அந்த சக்தியை என்னிடமிருந்து பறித்துக் கொண்டு விட்டாள் அம்பாள். அதற்காக அவளிடம் மன்னிப்புக்கோரி, மீண்டும் என் சக்திகளை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்துவதாக சங்கற்பம்

செய்து அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றாராம் அச்சித்தர்.

ஆம்; அந்த அளவு வித்தைகளுக்கும், சித்துக்களுக்கும், நாயகியாக விளங்குகிறாள் அம்பாள்.

அவ்வாறு கலாதேவியின் அம்சமாக தேவி அங்கு எழுந்தருளுவதற்கு ஒரு தெய்வீக கருவியாக இருந்தார் ஆதிசங்கர பகவத்பாதாள்.

4

ஆதிசங்கரரைப் பின்தொடர்ந்த சங்கரி

குடசாத்திரி மலைத்தொடர் சுற்றிலும் சூழ்ந்திருக்க சௌபர்ணிகையாற்றின் தீரத்தில் அமைந்துள்ள கொல்லூர் திருத்தலத்தில், மூகாம்பிகை அம்மன் திருக்கொலுக் கொண்டு அமர்ந்திருக்கும் தன்மையில் ஓர் அற்புதத் தத்துவம் அடங்கியிருப்பதாக, ஆலயத்தில் உள்ள ஒரு பெரியவர் குறிப்பிட்டார்.

அதாவது, மனிதனின் ஆன்மிக வளர்ச்சிக்கு ஊற்றாகவும் மையமாகவும் அமைந்திருப்பது அவன் உடம்பிலுள்ள குண்டலினி சக்திதான் என்பதை பழம்பெரும் ரிஷிகள் முதலான சான்றோர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

மனிதனின் முதுகெலும்பின் அடித்தளத்தில், மூலாதாரம் என்று சொல்லப்படும்-உடலின் மையப்பகுதியில் இந்த குண்டலினி சக்தி எல்லாருடைய உடம்பிலும் இருந்தாலும், சிலர் மட்டுமே அதன் தெய்வீக ஆற்றலை தம் ஆன்மபலத்தால் வலிமை பெறச் செய்து உயர்வடைவர். அந்தச் சக்தி நம்முள் விருத்திப்பெறும்போதுதான் அறிவின் நிலையில் பல புதிய புதிய பரிணாமங்கள் ஏற்பட்டு, அற்புத சித்திகளும் ஆற்றல்களும் நமக்கு உண்டாகின்றனவாம்.

அறிவுபூர்வமாக இக்குண்டலினி சக்தியை நமக்குள் எழச் செய்வதற்கு ரிஷிகள் பல வழிமுறைகளை வகுத்துத் தந்திருக்கிறார்கள். அவற்றுள் மிக முக்கியமானது, சர்வசக்தியான அன்னை பராசக்திக்கு நம்மை நாம் அர்ப்பணித்து, நம் மனதை அவள்பால் ஒருமுகப்படுத்தி, அவள் பாதங்களைப் பற்றிக் கொள்வதுதான்!

தேவி உபாசனையால் இப்படி நம்முள் இந்த அற்புத ஆற்றலை உருவாக்கிக்கொண்டால், சாதாரண மனிதர்கள் செய்ய முடியாத பல அற்புத சித்துக்களை மனிதன் செய்யலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது சமீப காலத்தில் விஞ்ஞான ரீதியாகவும் நிரூபிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

அந்த சக்தி நம்மையறியாமல் நம்முள்ளேயே அடங்கியிருக்கும் அபூர்வ தெய்வீக சக்தி. தெய்வத்தின் துணையால் அதை வளர்த்தால், சாதாரண மனிதனுக்கு மேற்பட்ட தெய்வீக ஆற்றல் நமக்குக் கைவரப்பெறும். இதை அடைந்தவர்கள்தான் நம்மை வியப்பிலாழ்த்தும் பல சித்துக்களைப் புரிகின்றனர்.

இந்த ஆற்றலை நாம் அடையத்தக்கதாக, அருள் வழங்கும் சில அபூர்வ தலங்களில் மூகாம்பிகைதலமும் ஒன்று. அதற்குக் காரணம், அந்தத் தலத்தில் அதற்கென விசேஷ ஆன்மிக வலிமையோடு அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறாள்.

இதை ஆதிகாலந்தொட்டு இன்றுவரையும் பலர் அனுபவப்பூர்வமாகப் பெற்று அனுபவித்திருக்கிறார்கள். ''இந்த தலத்தில் அம்பாளின் திருக்கோவில் அமைந்திருப்பதே இந்த பாரத நாட்டுக்கு மையப் பகுதியில்தான். மனிதனின் உடம்பில் எந்த இடத்தில் இந்தக் குண்டலினி சக்தி இருக்கிறதோ அதேமாதிரி, பாரதநாட்டின் மையப் பகுதியில் இந்தத் தலம் அமைந்திருக்கிறது. இந்த அமைப்பு, பாரத அன்னைக்கும்—பாரத நாட்டிலுள்ளவரும் கோடானு

கோடி மக்களுக்கும் ஆன்மிக மையமாய்—குண்டலினி சக்தியாய், அன்னை மூகாம்பிகை அம்பாள் எழுந்தருளியிருக்கிறாள் என்பதற்கு ஓர் அறிகுறி!'' என்கிறார் அத்தலத்திலுள்ள முதிய பட்டரான திரு. கணேச பட்டர்.

இத்தனை வலிமையான ஆன்மசக்தி அத்தலத்திற்கு அமைவுற்றது ஆதிசங்கரரின் அருட்பணியினால்தான். காரணம், அம்பாளை அங்கு பிரதிஷ்டை செய்தவர் ஆதிசங்கர பகவத்பாதாள்தான்.

அதைப்பற்றி பல செய்திகள் அங்கு கூறப்படுகின்றன.

சோட்டானிக்கரைத் தல வரலாற்றில்கூட அதைப் பற்றிய தெய்விகச் செய்தி ஒன்று கூறப்பட்டதை நாம் அறிவோம்.

அதாவது :

அம்பாளை, கலாதேவியான சரஸ்வதியின் அம்சமாக கேரள நாட்டில் எழுந்தருளச் செய்யவேண்டும் என்ற ஆர்வத்துடன் ஆதிசங்கரர் மைசூர் சாமுண்டீஸ்வரி அம்பாளைப் பிரார்த்தித்தாராம். தன் அருட்தனயனின் கோரிக்கையை ஏற்ற அன்னை ஒரு நிபந்தனையின்பேரில் அவருடன் கேரளாவுக்கு வர உடன்பட்டாளாம்.

அம்பாள் விதித்த நிபந்தனை : 'செல்வனே! நீ வழி காட்டிக்கொண்டு எனக்கு முன்னால் செல்ல வேண்டும். நான் உன்னைத் தொடர்ந்தே வருவேன். நீ செல்லும்போது திரும்பிப் பார்க்காமல் செல்லவேண்டும். அப்படிப் பார்த்தால், நீ எந்த இடத்தில் திரும்பிப் பார்த்தாயோ அந்த இடத்திலேயே நின்றுவிடுவேன்!'' என்பதுதான்.

ஆதிசங்கரர் அந்த நிபந்தனைக்குட்பட்டு அம்பாளை அழைத்து வந்தார். 'கலீர்...கலீர்' என்று தன் சிலம்பொலி நாதம் எழ, தம் அருட்செல்வரான ஆதிசங்கரரைப்பின்பற்றி வந்து கொண்டிருந்தாள் அன்னை. திடீரென்று அந்த சிலம்பொலி கேட்கவில்லை. தம் மகனைச் சோதிக்க அம்பாள் தன் சிலம்பை கையில் எடுத்துக்கொண்டு அதன் ஒலி எழாதவாறு

செய்துவிட்டாள். சிலம்பொலி நிற்கவே ஆதிசங்கரர் திரும்பிப் பார்க்கிறார். அம்பாள் அத்தலத்திலேயே நின்று, 'செல்வனே, நான் உன்னிடம் வாக்குறுதி அளித்தவாறு இத்தலத்திலேயே நின்றுவிடவேண்டியவளாக இருக்கிறேன்' என்று கூறி, அத்தலத்திலேயே அருளிருக்கைகொண்டு விட்டாள். அவள் சித்தப்படியே அவளை அங்கு பிரதிஷ்டை செய்தார் ஆதிசங்கரர். அதுதான் இன்றைய கொல்லூர் திருத்தலம்.

ஆதிசங்கர பகவத்பாதாளை ஒரு அருட்கருவியாகக் கொண்டு, அம்பாள் ஆதிபராசக்தி கலைவாணியின் அம்சமாக எழுந்தருளிய திருக்கோலம்தான் கொல்லூர் மூகாம்பிகை.

பின்னர் ஆதிசங்கரரின் வேண்டுகோளுக்கிணங்க, 'விடியற்காலையில் (உஷத் காலத்தில்) சுமார் ஒரு நாழிகைப் பொழுதுகாலம் சோட்டானிக்கரைத் தலத்தில் அம்பாள் சரஸ்வதி அம்சமாக எழுந்தருளியிருப்பதாகவும், அதன் பின்னரே கொல்லூர் தலத்திற்கு வருவதா'கவும் வாக் களித்து அருள் புரிந்தாள் இதையொட்டியே சோட்டானிக் கரை தலத்தில் அதிகாலை நாலரை மணிக்குதரிசனம் செய்தால் மூகாம்பிகையையே தரிசித்த பலன் கிட்டுமெனக் கூறுகிறார்கள்.

கொல்லூர் மூகாம்பிகை தலத்தில் காலை பூஜை ஆறு மணிக்குமேல்தான் தொடங்குகிறது. சோட்டானிக்கரை யிலிருந்து அம்பாள் மீண்டும் கொல்லூருக்கு வந்தபின் பூஜையைத் தொடங்குவதற்காகக் காத்திருப்பதைப் போலவே, இந்தப் பூஜைக் காலமும் அமைக்கப்பட்டிருக் கிறது.

இந்த வரலாறு அல்லாது கொல்லூர் தலத்தில் மூகாம்பிகை அம்பாளை ஆதிசங்ரரர் பிரதிஷ்டை செய்த தற்கு வேறொரு செய்தியும் கூறப்படுகிறது...

ஆதிசங்கர பகவத்பாதாள் தம் சீடர்களுடன் கன்னியா குமரியிலிருந்து காஷ்மீர்வரை பாதயாத்திரையாகச் சென்று

அத்வைத கருத்துக்களைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த போது, கோல மகிரிஷி தவம் செய்து உய்வுற்ற இந்தக் கோலபுரம் (கொல்லூர்) திருத்தலத்துக்கு வந்தார். அப்போது கோல மகிரிஷி வழிபட்டு வந்த சுயம்புவான ஜோதிர்லிங்கம்தான் அங்கேயிருந்தது. அந்த சொர்ணரேகை பூண்ட ஜோதிர்லிங்கத்தின் அருகே ஆதிசங்கரர் பெருமானும் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அப்போது அத்தலத்தில் இப்போது காணப்படும் அம்பிகையின் திருவுருவம் அங்கேயில்லை.

ஏகாந்த வெளியில் ஜோதிர்லிங்கம் முன்னால் அமர்ந்து ஆதிசங்கரர் தியானம் செய்து கொண்டிருந்தபோது, அவர் முன் ஜெகஜ்ஜோதியாக அம்பிகையின் உருவம் ஒளிர்ந்து காட்சியளித்தது.

தான் தரிசித்த அம்பிகையின் உருவத்தை மனதில் கொண்டு அதன்படியே—சங்கம், சக்கரம், அபயக்கரம் ஏந்தியவளாக பத்மாசனத்தில் அமர்ந்து காட்சியருளிய திருக்கோலத்தில் அவளை பஞ்சலோக விக்கிரகத்தில் வார்த்து, ஏற்கெனவே இருந்த ஜோதிர்லிங்கத்தின் பின்புறமாகப் பிரதிஷ்டை செய்தார் ஆதிசங்கரபகவத்பாதாள்.

அதுவே இன்று கொல்லூர் திருத்தலத்தில் நாம் வழிபடும் அம்பாளின் திருவடிவம். அந்த புனித தேவியின் திருவுருவத்துக்கு அபிஷேகமோ பூஜைகளோ கிடையாது. எல்லா ஆராதனைகளும் சுயம்புவான ஜோதிர்லிங்கத்துக்கே செய்யப்படுகின்றன. ஆலயத்தின் பூஜா முறைகளும் ஆதிசங்கரரால் வகுக்கப்பட்ட ஆகமசாசனத்தின்படிதான் நடைபெறுகின்றன.

ஆதிசங்கரர் தியானத்தில் ஆழ்ந்திருந்த இடம் இன்றும் அத்தலத்தில் தியானமண்டபம் என்று போற்றப்படுகிறது.

திருஞானசம்பந்தருக்கு அன்னை பராசக்தி ஞானப்பால் ஊட்டியதைப்போல், ஆதிசங்கர பகவத்பாதாளுக்கு அன்னை

மூகாம்பிகை அருட்பால் ஊட்டிய ஓர் அற்புதம், அவர் அங்கு தியானத்தில் ஆழ்ந்திருந்தபோது நடந்தது.

5

அருள் மணம் கமழும் அந்தக் குடசாத்திரி மலைத் தீரத்தில் ஆன்மீக ஒளியாய் ஆதிசங்கர பகவத் பாதாள் அமர்ந்து அம்பிகையை நோக்கி அருள் தவம் மேற்கொண்டிருக்கிறார்.

தவத்தின் அகோரத் தன்மையால் அந்த அம்பிக்கைச் செல்வரின் பொன்மேனி தளர்வுற்றுச் சோர்ந்திருக்கிறது. சித்தமெல்லாம் தேவதேவியின்பால் சங்கமித்து நிற்க, அவர் திருமேனி பராமரிப்பு இன்றிப் போகவே அது சோர்ந்து மயக்கமுறும் நிலையை அடைந்தது.

அச்சமயம் அந்த சௌபர்ணிகை நதித் தீரமே கானமாய் எதிரொலிக்க 'கலீர் கலீரென்று' ஓர் இனிய சதங்கையொலி அமானுஷ்யமாய்க் கேட்கிறது. அந்த அருட்தலமே அந்தச் சதங்கையொலி கேட்டு சிலிர்ப்புற்று மெய்மறந்து நின்றது. அத்துணை தேஜஸுடன் ஓர் எழில் நிறைந்த திருவழகி கையில் பொற்கலசமொன்றை ஏந்தியவாறு அந்த அமைதி தவழும் குடசாத்திரி மலைச்சாரலில் இறங்கி வருகிறாள்.

அவளுடைய திவ்யதேஜஸைக்கண்டு, பொற்புடை பூமாதேவி தன்மேனி புல்லரிக்க, போற்றி நிற்கிறாள். வசந்தங்கள் மந்தமாருதமாய் அந்தப் பேரழகியை வணங்கி நிற்கின்றன.

பஞ்சபூதங்கள் அவளுடைய பாதம் தழுவிப் பணிந்து நிற்கின்றன. அனைத்தையும் தம் விழி அமுதக் கருணை நோக்கால் வனப்புறச் செய்தவாறு, அந்த எழிலரசி அருள் கோடிப் பிரகாசமாய்ப் புன்னகை சிந்த, மகான் ஆதிசங்கரர் தவம் இயற்றும் இடத்தருகே வருகிறாள்.

தன் முன் ஜோதிமயமாக நின்ற அந்தப் பேரழகியைக் கண்டு மலர மலர விழித்து நோக்குகிறார், தவத்திலிருந்த ஆதிசங்கரர்.

அவள் புன்னகை பொலிய, தன் கையிலிருந்த பொற் கலசத்தை ஆதிசங்கரரிடம் நீட்டி, ''இதோ அமுது! அருந்துக!'' என்கிருள்.

அந்தப் பொற்கலசத்தில் பால் நிறைந்து பொங்கியிருக் கிறது. தவத்தால் மேனி சோர்ந்திருந்த ஆதிசங்கரருக்கு அப்பொற்கலசத்தை வாங்கி அமுதை அருந்தும் வலிமை இல்லே. எனவே அவர், ''இதைப் பெற்று அருந்த எனக்கு சக்தியில்லே!'' என்ருர்.

''தேடாமல் சக்தி எப்படி வரும்?'' என்று புன்னகை யுடன் வினவிஞள், அந்தப் ஜோதிப் பேரழகி.

ஆதிசங்கரர் வியப்புடன் அவளே நோக்கியவாறு, ''தேடிஞல் சக்தி கிட்டுமோ?'' என்று கேட்டார்.

''நீ தேடியதால் தானே உன்னேத் தேடியே சக்தி வந்திருக்கிறது!'' என்று புன்னகைத்தாள் அந்த எழிலரசி.

''எங்கே...?''—பரவச வியப்புடன் கேட்டார் ஆதிசங்கரர்.

''இங்கே, உன் எதிரே...!''—அவள் அகிலம் சிலிர்க்க நகைத்தாள்.

அதைக் கேட்டதும் பரவசம் பொங்க, ஆதிசங்கரரின் விழிகள் பூரித்து மலர்ந்தன. கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. காரணம், தன் எதிரே தோன்றிய பேரழகி சாதாரண பெண்ணல்ல என்பதை அவர் உணர்ந்ததுதான்,

அவள் வேறு யாருமில்லே, மூலத்துள் மூலமாய், சீலத் தின் நாயகமாய், கருவுக்குள் உயிராய், ககனத்துள் பஞ்ச பூதமாய், அகிலாண்டகோடி பிரம்மாதி நாயகர்களுக்கும் நாயகமாய், மும்மூர்த்திகளின் முப்பெரும் சக்திகளுக்கும் மூலாதாரமாய், காலங்களே வென்ற கருணே முகிலாய், சர்வத்தையும் ஆண்டு - சர்வத்துள்ளும் அடங்கி - சர்வத்தை யும் இயங்க வைக்கும் சர்வலோக நாயகியான, ஆதிபரா சக்திதான்.

கோடிசூரியப் பிரகாசமாய் ஒளிர்ந்த அன்னையின் திருக் காட்சியைக் கண்டதும் ஆதிசங்கரர் அக்கணமே வல்லமை மலர்ச்சியுற்றவராக, உள்ளம் கிளர்ந்தெழ அன்னையை அடிபணிந்து எழுந்தார். அவருடைய அருள் நாவிலிருந்த அம்பிகையின் அற்புத சக்திகளை - தான் தரிசித்த அந்த மகத் தான திவ்ய செளந்தர்யத்தை விவரித்து - அருட் சுலோகங் கள் அவருடைய நாவிலிருந்து பிரவகித்து வெளிவந்தன.

அதுதான் ஆதிசங்கர பகவத்பாதாள் மூகாம்பிகை திருத்தலத்தில் அருளிய **'செளந்தர்ய லஹரி'** என்ற அம்பிகைத் துதி.

''செளந்தர்ய லஹரி'யின் முதல் சுலோகத்தில் ஆதிசங்கரர் அம்பிகையைப் பற்றி இவ்வாறு அருளுகிறார்:

'சிவபெருமான் சக்திமயமான அம்பிகையுடன் சேர்ந் தால் மட்டுமே தம் வினைகளை ஆற்றும் வல்லமை அடைகிறார்! சக்தியில்லாமல் தனித்திருந்தால் அசைவற்று, செயலற்றுப் போகிறார். ஆகையினால், ஹரி—ஹர—பிரும்மா ஆகிய மும்மூர்த்திகளுமே அம்பிகையைப் பூஜித்துத்தான் செயலாற்றுகின்றனர்! அந்தகைய அம்பிகையை நாம் பூஜித்துப் பக்தி செய்ய வேண்டுமானால், பல பிறவிகளிலும் செய்த புண்ணிய பலம் நமக்குக் கிட்டியிருக்க வேண்டும். அவ்வாறு புண்ணியம் இல்லாதவர்கள் அம்பாள் வழிபாட் டில் ஈடுபட முடியாது!'

—இந்த சுலோகத்தில் கூறப்பட்டிருக்கும் ஓர் உண்மை. எந்தத் தலத்தில் இச்சுலோகத்தை ஆதிசங்கரர் அருளினாரோ அதே தலத்தில் நிதரிசனமாக இன்றும் மெய்ப்பாடாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது...

அன்னை நிகழ்த்திய அற்புதங்கள்

ஆம்; அத்தலத்தை சென்று தரிசிக்கும் பாக்கியம் பெற்றோர் அனைவருமே தம் புண்ணியம் மேலோங்கப் பெற்ற வர்கள். அவர்களுடைய வல்லிவினை மாறும் காலத்தில்

நான் அவர்கள் மூகாம்பிகை தலத்துக்குச் சென்று அம்பாளை தரிசித்து உய்வுற முடியும்—

அவர்கள் அவ்வாறு வழிபடும் பாக்கியம் பெற்றதுமே அவர்களுடைய வேதனைகள் மாறி அவர்கள் வாழ்வில் புதுமலர்ச்சி ஏற்படும்.

இது நிதரிசனமாகப் பல அன்பர்கள் வாழ்க்கையில் அன்றாடம் நடந்து வருகிறது.

இப்படித் தன் வாழ்வில் ஒரு மலர்ச்சியான மாற்றத்தை அன்னை மூகாம்பிகை அளித்த செய்தியை, சென்னையைச் சேர்ந்த ஒரு சகோதரி என்னிடம் கூறினார். (அவர், தன் பெயர் குறிப்பிடப் படுவதை விரும்பவில்லை.)

1975-ம் வருடம் குடும்ப சூழ்நிலை காரணமாக அவர் மிகவும் வேதனைக்குள்ளாகியிருந்தார். எந்த மார்க்கத்திலும் அந்த வேதனை மாறுவது போல் தோன்றவில்லை, தெய்வாதீனமாக ஏதாவது அற்புதம் நிகழ்தாலொழிய தன் வாழ்க்கையில் அமைதி ஏற்படாது என்று தோன்றவே, அவர் பெரிதும் மனம் உடைந்து போயிருந்தார்.

அப்போதுதான் அவருக்கு அன்னை கொல்லூர் மூகாம்பிகையின் நினைவு வந்தது. அதற்கு முன் அவர் ஒரே ஒரு முறை 'டூரிஸ்ட்' பஸ்ஸில் சுற்றுலாப் பயணத்தின்போது அங்கு சென்றிருக்கிறார். அப்போது அவர் நினைவில் பதிந்த அம்பிகையின் முகம், அந்த வேதனையான காலகட்டத்தில் அவர் மனத்தில் ஒளி வீசியது.

எனவே, அத்தலத்திற்குச் சென்று அம்பிகையை வழிபட்டு தன் மனக்குறையை அவளிடம் முறையிட்டு 'சங்கல்பம்' செய்து கொண்டு வரவேண்டும் என்று விரும்பி, கொல்லூரில் உள்ள திரு. சுப்பராய அடிகான் என்ற குருக்களுக்குக் கடிதம் எழுதினார்.

(இந்தத் தலத்திற்கு யாத்திரை செல்ல விரும்புவோருக்கு இந்த இடத்தில் சில குறிப்புகளைச் கூற வேண்டியது அவசிய

மாகிறது. கொல்லூர் ஒரு சிற்றூர்தான். அங்கு பிரபல மான உணவுச் சிற்றுண்டிச்சாலை வசதிகள் அதிகமாக கிடையாது. தேவஸ்தான விடுதி அருகே ஒரே ஒரு உணவு விடுதி மாத்திரமே சமீபத்தில் தோன்றியிருக்கிறது. அதற்கு முன் காலம் காலமாகத்யாத்திரிகர்களுக்குத் தம் இல்லத்தில் உணவளித்து, தங்குமிடமும் ஏற்பாடு செய்து வந்தவர்கள், அந்த ஆலயத்தைச் சேர்ந்த குருக்கள்தாம். அவர்கள் 'அடிகான்' - 'பட்டா' என்று குறிப்பிடப்படும் வகுப் பினர். அவர்களுள் ஒருவரைச் சந்தித்தால், அவரே தங்கும் வசதிகள் செய்து தருவதோடு, ஆலயத்தில் சங்கல்ப மும் செய்து வைத்து, தரிசன வசதிகளைச் செய்து தருகிறுர். அப்படிப்பட்டவர்களுள் ஒருவர்தான் திரு. சுப்பராய அடிகான்.)

நவராத்திரியையொட்டி கொல்லூருக்கு தாம் வர விரும்புவதாகத் தெரிவித்து கடிதம் எழுதினுர், அந்தச் சென்னை வாழ் சகோதரி. அப்போது திரு. சுப்பராய அடிகானிடமிருந்து வந்த கடிதம் அவருடைய பயணத் திட்டத்தையே தடை செய்வதாக அமைந்தது.

6

'எதற்கும் வேளை வரவேண்டும்' என்போம்.

கொல்லூர் மூகாம்பிகை அன்னையைத் தரிசிப்பதற்கும் அந்த வேளை முக்கியம்! நான் குறிப்பிட்ட அந்தச் சென்னைவாழ் சகோதரியின் விஷயத்திலும் அப்படித்தான் நடந்தது.

'நவராத்திரி காலத்தில் அம்பாளை தரிசிக்க வேண்டும்' என்று விரும்பி, அவர் கொல்லூரில் இருந்த திரு. சுப்ராய அடிகானுக்கு கடிதம் எழுதியபோது, அவரிடமிருந்து, 'இப்போது வரவேண்டாம்! நவராத்திரி காலத்தில் பெரும் கூட்டமாக இருக்கும். நவராத்திரி கடந்தபின், ஓர் அமைதி

யான காலத்தில் வாருங்கள்; மனநிறைவோடு அம்பாளின் தரிசனத்தைப் பெறலாம்' என்று பதில் வந்தது.

அந்தக் கடிதத்தை அடிகானே எழுதிஞரா, அம்பாளே அந்தச் சகோதரியை வரவேற்க வேண்டிய வேளையை நிச்சயித்து, திரு. சுப்பராய அடிகாகனே ஒரு கருவியாகக் கொண்டு தகவல் அனுப்பிஞளா? அதை அந்த ஈஸ்வரியே அறிவாள்!

அதற்குப்பின் சில மாதங்கள் கழித்தே அந்த சகோதரி கொல்லூருக்குச் சென்ருர். அங்கு தனக்கு நேர்ந்த அனுபவம் பற்றி அந்த சகோதரி பரவசப் பெருக்குடன் கூறுகிருர் :

''அமைதியான மலே சூழ்ந்த அந்தக் கொல்லூர் தலத்தில் அம்பாளே வழிபடுவது வாழ்வில் ஓர் அபூர்வ அனுபவம். பூர்வபுண்ணிய பாக்கியசாலிகளுக்கே அது கிட்டும்!

''அம்பாளேத் தரிசித்துவிட்டு வீடு திரும்பிய சில நாட்களுக்குள்ளேயே என் மனதில் வேதனேயை உண்டாக்கிக் கொண்டிருந்த குடும்பச் சூழ்நிலே அப்படியே மாறிவிட்டது. அதன்பின் கிட்டத்தட்ட ஏழு வருடங்களாக இதுவரை என்னே எந்த துன்பமும் வேதனேப்படுத்தியதில்லே. மனதில் சிறு சஞ்சலமேற்பட்டாலும், மூகாம்பிகை அம்மனே நினேத்துக்கொள்வேன். அந்த வேதனே மாறிவிடும்'' என்ருர் அந்த சகோதரி.

7

உலகில் வேறு எந்த மதத்திலும் காணப்படாத ஒரு தனித்தன்மை இந்து மதத்தில் உண்டு.

அண்ட கோடிகளேயும் அனேத்துக் கோடி ஜீவராசி களேயும் இயக்கி, மும்மூர்த்தித் தத்துவங்கள் மூலம் படைத்துக்—காத்து—அழித்து அனுக்கிரகித்து வரும் மூல

சக்தியை, ஆதிபராசக்தியென்னும் தாயின் வடிவில் கண்டு தெளிந்து வழிபடுவது இந்துமதம் ஒன்றிலேயே காணப்படும் தனித்தன்மை.

கடவுளை தாய்மைச் சக்தியாகக் கண்டவர்கள் நம் ரிஷிகள்-தெய்விக சித்தர்கள். இதிகாச காலந்தொட்டு இந்நாள் வரை இதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு.

ராமாயணத்தில் தீயசக்தியால் ராவணன் ஆகர்ஷிக்கப் பட்டு, பண்புக்கு விரோதமான செயல்களில் ஈடுபட்ட போது, அவனை வெல்ல ஸ்ரீராமன் வழி பட்டது தேவியைத் தான். இந்தியக் கலாசாரத்தை மேல்நாடுகளுக்கு விளக்கி, நம் மேன்மையை உலகெங்கும் புலப்படுத்திய சுவாமி விவேகானந்தரும், அவர்களுடைய குருவான ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சரும் தேவி உபாசகர்களே! ஏன், நம் மகாகவி பாரதியார்கூட தேவிஉபாசகர்தான்! அத்தகைய சக்தி வழிபாட்டின் மெய்ப்பாடுகளுக்கும், மகிமைகளுக்கும் நிதர்சன விளக்கமாகத் திகழும் அபூர்வசக்தி தலங்களில் மூகாம்பிகை திருத்தலமும் ஒன்று.

சாதாரணமாக மூகாம்பிகை தலத்தில் ஒவ்வொரு வித விதமான பூஜைகள் செய்யப்படுகின்றன. உதாரணமாக, தொழிலில் வெற்றி பெற்று விருத்தியாவதற்கு குங்கும அர்ச்சனை; நோய்களில் இருந்து நிவாரணம் பெறுவதற்கு வடை நைவேத்தியம்: கல்வியில் சிறந்தோங்க மகா திரு மதுர நைவேத்தியம்; பொதுவான வேண்டுகோளுக்கு குங்குமார்ச்சனை... இப்படிப் பலவிதம். இதில், 'மகா திரு மதுரம்' ஞான விருத்திக்குரியது.

'மகா திருமதுரம்' என்ற இந்தப் பிரசாதம் நாற்பத் தெட்டு நாட்கள் வரை கருவறையில் வைக்கப்பட்டு பூஜை செய்து தரப்படுமாம். மிக அபூர்வமான இப் பிரசாதத்தை உண்ட பலர், சிறந்த மகான்களாகவும்—ஞான சீலர்களாக

வும் மாறியிருக்கிறார்கள் என்பது அந் தலத்தில் கூறப்படும் செய்தி.

முற்காலத்தில் இந்தப் பிரசாதத்தை பொதுமக்களுக்கு விநியோகிப்பதில்லையாம். அம்பாளுக்கு நைவேத்தியம் ஆனதும், கோவிலுக்குப் பின்புறம் பிராகாரத்தில் இருக்கும் கிணற்றில் விட்டெறிந்து விடுவார்களாம். (அதுதான் ஆலாயப் பிரகாரத்தில் உள்ள கிணறு.)

ஒருமுறை மலையாளத்தைச் சேர்ந்த குஞ்ஞன நம்பியார் என்பவர் இப் பிரசாதத்தைப் பெற்று உண்ண முயன்றாராம். அவருக்கு அந்தப் பிரசாதம் தரப்படவில்லை.

இருந்தாலும் குஞ்ஞன் நம்பியார் மனம் தளரவில்லை. எப்படியாவது பிரசாதத்தைப் பெற்றே தீரவேண்டும் என்ற வைராக்கியத்துடன், பிரசாதம் வீசி எறியப்படும் கிணற்றுக்குள் யாருக்கும் தெரியாமல் இறங்கி ஒளிந்திருந்தாராம். நைவேத்தியம் ஆனதும், பூஜை செய்யும் குருக்குள் அந்தப் பிரசாதத்தை எடுத்து, வழக்கம் போல் கிணற்றுக்குள் எறியும்போது, இவர் கிணற்றுக்குள் இருந்தே வாயைத் திறந்து கொண்டு பிரசாதத்தை வாயில் ஏந்தி உண்டாராம்.

அப்படி உண்டதன் பலனாக அவர் கேரளாவில் பெரும் புகழ் பெற்ற கவிஞராக மாறினாராம்!

இந்தச் செய்தியை நாராயண புராணிக் என்பவர், ''அம்பாள் பிரசாதத்தைப் பெறவேண்டும் என்று இப்படி வைராக்கியமான பக்தியுடன் இருந்து, அதைப் பெற்று உண்டதாலேயே குஞ்ஞன் நம்பியார் பெரிய கவிஞரானார். அதைப்போல அம்பாளின் திருவடிகளின் மீது அசையாத பக்தி கொண்டு பூஜித்தால், நம் வாழ்க்கையிலும் முன்னேற்றம் ஏற்படும்'' என்றார். அந்த நம்பிக்கை என்னை வியப்புறச் செய்தது.

9

நம் சொந்த அம்மா—அப்பா நம்மீது பாசத்தைப் பொழிவார்கள் என்பதில் சந்தேகமில்லை. நமக்குத் தேவையானவற்றை தாமே உணர்ந்து தருவார்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

ஆனாலும், சில சமயங்களில் அவர்களிடம் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளும்போது, நாம் சில வழிமுறைகளையும் சாதுரியங்களையும் கடைப்பிடிக்க வேண்டியதிருக்கும்.

தெய்வத்தை நாம் வழிபடும் பூஜா முறையும் கிட்டத்தட்ட இப்படித்தான்!

கொல்லூர் மூகாம்பிகை திருத்தலத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த பூஜா முறைகள், இறைவிக்கும்—எளிய பக்தனுக்கும் உள்ள உறவில் அபூர்வ நெருக்கத்தை உருவாக்கித் தருவதாக அமைந்துள்ளன...

முதன்முறையாக இக்கோவிலுக்கு வருபவர்கள் 'சங்கல்ப ஸ்நானம்' செய்ய வேண்டும். அதாவது, புரோகிதர் ஒருவரிடம்—சௌபர்ணிகா ஆற்றுக்குச் சென்று அவர் சொல்லச் சொல்ல மந்திரங்களைத்தானும் உச்சரித்து, ஸ்நானம் செய்ய வேண்டும். பின், புரோகிதரைத் தொடர்ந்து பூஜா பொருட்களுடன் ஆலயத்துக்குச் சென்று பூஜைத் தட்டை சந்நிதியின் வாசல்நடையில் வைத்து விட்டு, பிராகாரத்தை வலம் வந்து வணங்க வேண்டும். பின்னர், தம் மனதில் உள்ள கோரிக்கையைச் சொல்லி அதற்குரிய வழிபாடுகளை ஆலயத்தில் செய்யவேண்டும். ஒவ்வொரு வழிபாட்டு முறையையும் மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள். உத்தமம் — மத்திமம்—சாதாரணம் என்று மூன்று வகை. இதில் முதல் வகையான உத்தம வழிபாடு சகஸ்ரநாம அர்ச்சனையுடன் (தேவியின் நாமத்தை ஆயிரம் முறை உச்சரிப்பு) செய்யப்படுவது; இரண்டாவது வகை தேவியின் நாமத்தை முன்னூறு முறை உச்சரித்துப்

பூஜை செய்வது; மூன்றுவது முறை, தேவியின் நாமத்தை நூற்று எட்டு முறை உச்சரித்து செய்யப்படுவது. இவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, நம் கோரிக்கையைக் கூறி வழி படலாம்.

இத்தலத்தில் நடக்கும் 'சண்டி ஹோமம்' குடும்பத் தோடு செய்யப்படும் ஓர் அபூர்வ பூஜையாகும்.

நான் சென்றிருந்தபோது, கேரளாவைச் சேர்ந்த பி. கே. எஸ். மேனன் என்பவர்—தன் துணைவியார் நளினி அம்மையாருடனும், மகள் பானுமதி, வருங்கால மாப்பிள்ளை நந்து ஆகியோருடனும் சண்டிஹோமம் செய்து கொண்டிருந்தார். அந்த சண்டி ஹோமத்தைப் பற்றி அவர் கூறிய சில செய்திகள்...

''எந்தக் காரியத்தையாவது செய்யும்முன் கொல்லூர் அம்பிகை தலத்தில் வந்து அம்பாளைப் பிரார்த்தித்து, அவள் எல்லைக்குள் சண்டி ஹோமம் செய்தால் அந்தக் காரியம் எந்த விக்கினமும் இல்லாமல் பலிதமாகும். கோயிலிலேயே அதிக செலவில் நிறைவேற்றப்படும் ஹோமபூஜை இது தான். அதற்கேற்ற அதித சக்தியும் அந்த பூஜையில் உண்டு என்பதை நான் நிதர்சனமாகக் கண்டறிந்திருக்கிறேன். என் குடும்பத்தில் எந்தப் பிரச்சினை ஆனாலும், இங்கே வந்து சண்டிஹோமம் செய்துவிட்டுப் போய்விடுவேன். அப்புறம் அம்பாள் பார்த்துக் கொள்வாள்!'' என்றார் திரு. மேனன்.

அவருக்குத் திருமணமான புதிதில் குழந்தைப்பேறு இல்லாமல் இருந்ததாம். கொல்லூர் மூகாம்பிகை தலத்தில் வந்து சண்டிஹோமம் செய்தாராம். பலன் உடனடியாகக் குழந்தைப் பேறு கிட்டியது. இப்போது அந்தப் பெண் குழந்தை வளர்ந்து அதற்கு திருமணம் நிச்சயம் ஆகியிருக் கிறது. தன் மகளையும், அவளுக்கு நிச்சயிக்கப்பட்ட மண மகனையும் ஆலயத்துக்கு அழைத்து வந்து சண்டிஹோமம் செய்கிறார்.

* * *

என்னைத் தேடி ஓர் அன்பர் உள்ளத்தை உருக்கும் ஒரு வேதனையான செய்தியுடன் வந்தார். இவருடைய சகோதரி

வாய்பேசும் சக்தியற்றவள். பிறவி ஊமை. இருப்பினும் சகோதரியை மிக அருமையாகப் பேணி வளர்த்தார். உரிய வயது வந்ததும் சிரமப்பட்டு மணமகனைத் தேர்ந்தெடுத்து, திருமண ஏற்பாடும் செய்தார்.

மாப்பிள்ளை அவருக்கு மிக நெருங்கிய உறவினர்தான். அந்தப் பெண்ணின் குண இயல்புகளை இளம் வயதில் இருந்தே தெரிந்தவன்தான். வாய் பேசும் ஆற்றல்தான் இல்லையேயொழிய, பண்பிலும் குடும்பக் காரியங்களைக் கவனிக்கும் பாங்கிலேயும் மிகவும் சாமர்த்தியமான பெண் அவள்.

இதை அறிந்த அந்த மாப்பிள்ளைப் பையனும், திருமணத்துக்கு முழுமனதுடனே சம்மதித்தான். அவன் சென்னையில் ஒரு கம்பெனியில் வேலை பார்ப்பவன்.

அவன் அளித்த சம்மதத்தின்பேரில் மிகுந்த உற்சாகத்தோடு பெண்ணின் சகோதரர் திருமண ஏற்பாடுகளைச் செய்தார். குடும்பத்தில் உற்றார் உறவினர்களுக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சி. ஊமைப் பெண்ணைக்கூட உள்ளன்போடு திருமணம் செய்து கொள்ளும் அந்த இளைஞனை அனைவரும் பாராட்டினர்.

இந்நிலையில் திடீரென்று ஒரு சோதனை ஏற்பட்டது.

நிச்சயதார்த்த முகூர்த்தம் நிகழ்வதற்கு முந்திய நாள் சாயங்காலம் மாப்பிள்ளைப் பையன் வந்து, ''திருமணம் வேண்டாம். அந்த ஊமைப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு காலமெல்லாம் என்னால் கஷ்டப்பட முடியாது!'' என்றானாம்.

அனைவருக்கும் பேரதிர்ச்சி. மெல்ல விசாரித்தபோது தான்நடந்த உண்மை தெரிய வந்தது. அந்தப் பையன், ஊமைப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது பற்றித் தன் அலுவலகத்தில் இருந்த நண்பர்களிடம் பெருமையோடு சொன்னானாம். அதைக் கேட்ட சில விஷமத்தனம் கொண்ட நண்பர்கள் அவனைக் கேலி செய்து, ''பைத்தியக்காரனாக இருக்கிறாயே! என்னதான் சொந்த பந்தமாக இருந்தாலும் முதலில் சொந்த வாழ்க்கையை நினைத்துப் பார்க்க

வேண்டும். வாழ்க்கை பூராவும் ஒரு ஊமைப் பெண்ணோடு வாழ முடியுமா? அதெல்லாம் வீண் ஜம்பம். உன் அழகுக்கும், நீ வாங்குகிற சம்பளத்துக்கும் ரதி மாதிரி பெண்கள் கிடைப்பார்கள்'' என்று அவனை உசுப்பிவிட்டு விட்டார்களாம்.

அது மட்டுமல்ல; அந்த அலுவலகத்திலேயே அவனுடைய வருமானத்திலும், உழைப்பிலும் ஒரு கண் வைத்திருந்த இன்னொரு ஊழியர், அவனைத் தன் வீட்டு மருமகனுக்கிக்கொள்ள வேண்டும் என்று விரும்பி, சில நண்பர்கள் மூலம் அவனிடம் பேசி, அவனைத் தன் மகளைப் பெண் பார்க்கலே அழைத்துச் சென்று விட்டார்.

சென்ற இடத்தில் பையனின் மனம் மாறிவிட்டது. ஏனென்றால், புதிதாக அவன் சந்தித்த பெண் நல்ல அழகி. சாமர்த்தியமாக இனிக்க இனிக்கப் பேசும் சக்தியுள்ளவள். இந்தப் பையனிடமும் சரளமாகவும், மனோரம்மியமாகவும் பேசினாள். பையனுக்கு மனமயக்கம் உண்டாகிவிட்டது.

'இப்படி ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதை விட்டுவிட்டு ஒரு ஊமைப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டுமா?' என்ற கேள்வி அவன் மனதில் பிறக்க ஆரம்பித்து விட்டது. மற்ற நண்பர்களும் அதனை விசிறி விட்டார்கள். உடனே உறுதியாக ஒரு முடிவுக்கே வந்து விட்டான்.

அந்த வேகத்தில்தான் அந்த ஊமைப் பெண்ணின் சகோதரரிடம் வந்து, ''கல்யாணத்தை நிறுத்திவிடுங்கள். எனக்கு மனசில்லை'' என்றான் அவன்.

உற்றார் உறவினர் அனைவருக்கும் தெரிய வைத்து, கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் செய்த பின்னர் கல்யாணத்தை நிறுத்த முடியுமா? அதன்பின் அந்தப் பெண்ணை யாராவது திருமணம் செய்து கொள்ள முன் வருவார்களா? இந்த கலக்கம் பெண் வீட்டாருக்கு ஏற்பட்டது. பெண்ணோ மனம் இடிந்து போய்விட்டாள்.

அதுவரை தனக்கு ஒரு ஊனம் இருப்பதைப் பற்றியே கவலைப்படாமல், உற்சாகமாக இருந்த பெண் இந்த-

அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ள சக்தியற்று, நொறுங்கிப் போனுள். சாப்பிடுவதில்லே. தூங்குவதில்லே. தன் மனக் குறையைப் பிறரிடம் சொல்லி ஆற்றிக்கொள்ளவோ பேசும் சக்தியை ஆண்டவன் அவளுக்குக் கொடுக்கவில்லே. சதா குமுறிக் குமுறி அழுது கொண்டிருந்தாள்.

இந்த தன்னுடைய சகோதரியின் சோகக் கதையுடன் தான் அந்த அன்பர் என்னேச் சந்தித்து, ''என் சகோதரியின் திருமணம் நிச்சயித்தபடி நடக்க ஏதாவது வழி பிறக்குமா?'' என்று கேட்டார்.

இந்தச் செய்தியைக் கேட்டு என்னுலும் வேதனேயடை யத்தான் முடிந்ததேயொழிய அவருக்கு எந்த ஆறுதலும் சொல்ல முடியவில்லே.

அவரோ, ''என் தங்கச்சிக்கு, கல்யாணம் என்று ஒரு பேச்சை உண்டாக்காமயே இருந்திருக்கலாம். நாங்கள் இந்தப் பேச்சை எடுக்காமலிருந்தால் அவள் நிம்மதியாகவே இருந்திருப்பாள். என் தங்கச்சியை வாழ வைக்கணும் என்கிற ஆசையிலே அவள் மனசிலே ஆசை நெருப்பைப் பற்ற வச்சிட்டேன். இன்னிக்கி அவள் அந்த வேதனே யிலே துடித்துக் கொண்டிருக்கிறுள். பையனே சர்வ சாதாரணமாக, 'நான் நிச்சயம் செய்த பிறகா வேண்டாம்னு சொன்னேன். அதுக்கு முன்னுடியேதான் சொல்லிட்டேனே...எனக்குப் பிரியமில்லே. விட்டுடுங்க!' என்று முகத்தில் அடித்தாற் போல் சொல்லுகிறுன். அதற்கு மேலே எங்களால் வற்புறுத்தவும் முடியவில்லே. வற்புறுத்திச் சொன்னுல் ஊமைப் பொண்ணே தலேயில் கட்டு வதற்கு எல்லாரும் கட்டாயப்படுத்துகிருேம்' என்று ஒரு கேவலப் பேச்சுவரும். என்ன செய்யறதுன்னே தெரியலே! மூகாம்பிகை அந்த ஊமைப் பெண்ணேப் பேச வைப்பாளா? அப்படி அவள் வாய் திறந்து பேசிவிட்டால் அந்தப் பையன் மனசு. மாறிடும்!'' என்ருர்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

'நாம் நினேத்ததை நினேத்தபடியே இறைவி நிறை வேற்றி வைப்பாளா? அவள் திருவுளப்பாங்கின்படிதானே

செயல்கள் நிறைவேறும்...' இப்படி சிந்தனை என்னுள் ஓடிக் கொண்டிருந்தது.

இருப்பினும் என் மனதில் ஒரு தெளிவு...அம்பாளை நம்பி நிற்கும் பக்தருக்கும் தேவிக்கும் இடையே உள்ள விஷயம் இது. இதில் யோசனை கூறவோ, தத்துவார்த்த விளக்கங்கள் தரவோ, நான் யார்?

'எண்ணிய முடிதல் வேண்டும்' என்று ஒரு பக்தன் தேவதேவியிடம் தொழுது நின்றால், அந்த எண்ணத்தை எண்ணியாங்கு முடித்துத் தருவதோ, அந்த எண்ணத்தில் ஏற்க முடியாததைத் தள்ளிவிட்டு ஏற்கக்கூடியதை நிறை வேற்றித் தருவதோ, அவள் பாரம்...அது அவளுக்கும்—அவளைத் தொழும் பக்தருக்கும் இடையே உள்ள விவகாரம் இல்லையா!

எனவே, நான் அவருக்குக் கொல்லூருக்குச் செல்லும் வழியைக் கூறி அனுப்பினேன்.

சுமார் ஒரு வாரம் ஆகியிருக்கும். அவர் மிகுந்த உற்சாகத்துடன் என்னைத் தேடி வந்தார். என் அறையி லுள்ள பல்வேறு அம்பாள் படங்களுக்கெல்லாம் நமஸ்காரம் செய்துவிட்டு ஆனந்தப் படபடப்புடன், ''அம்பாள் கருணை புரிந்துவிட்டாள்!'' என்றார்.

''உங்கள் தங்கை பேசி விட்டாரா?'' என்று வியப் புடன் விசாரித்தேன்.

''பேசுவதும் பேசாததும் அவள் முன் ஜென்ம பலன்... அவள் இப்போது பேசாவிட்டாலும், மூகாம்பிகை அம்மா அவள் சார்பில் பேசி அவளுடைய திருமணத்தை உறுதிப் படுத்தி விட்டாள்!'' என்று அந்த அதிசயத்தை விளக் கினார்...

திருமணம் நிச்சயிக்கப்படுமுன் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை மறுத்து விட்டாரல்லவா?

அதன்பின் என்னிடம் வழிகேட்டறிந்த பெண்ணின் சகோதரர் மூகாம்பிகை ஆலயத்துக்குச் சென்று, அம்பாளைத் தரிசித்து - தன் தங்கைக்கு வழிகாட்டும்படி அவளிடம் உள்ளமுருகப் பிராத்தித்து விட்டு - தன் மனப்பாரத்தை

யெல்லாம் அவள் பொற்கழல் திருப்பாதத்தில் சமர்ப்பித்து விட்டு ஊர் திரும்பியதும்—

அவர் வீட்டில் அவரை வரவேற்ற நபர், வேறு யாரு மல்ல...நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளைதான்!

அவர் கூறிய முதல் சொல்லே, ''கல்யாணத்தை அடுத்த முகூர்த்தத்திலேயே வைத்துக் கொள்ளலாம்!'' என்பதுதான்.

'எப்படி நிகழ்ந்தது இந்த மாற்றம்?' என்று வியப்பால் மனம் சிலிர்க்க அவர் விசாரித்தபோது, மாப்பிள்ளை தன் கனவில் அம்பாள் அருள் புரிந்த ஓர் அற்புதச் செய்தியைக் கூறினார்....

பெண்ணின் சகோரார் மூகாம்பிகை ஆலயத்திற்குச் சென்று வழிபாடு நடத்திய நாளன்று இரவில்—

இங்கே சென்னையில் மாப்பிள்ளைப் பையன் ஒரு கனவு கண்டாராம்.

கனவில் அந்தப் பையனின் இளைய சகோதரி - பதின்மூன்று பதினான்கு வயதிருக்கும் - பட்டுப் பாவாடை கட்டி சர்வாலங்காரத்துடன் அவர் அருகே வந்து மௌன மாக நின்றாராம். தங்கையை அப்படியோர் அலங்காரத் துடன் பார்த்தறியாத மாப்பிள்ளை அவளிடம் பிரமிப்போடு பேச்சுக் கொடுத்தாராம். தங்கை கோபித்துக் கொண் டவளைப்போல் வெகுநேரம் பேசவேயில்லை. அவர் ஆற்றாமை யோடு 'தங்கை'யிடம் வருந்தி வருந்திப் பேசியபின்...

தங்கை, ''நான்எப்போதும் பேசாமல்தானேஇருக்கிறேன். நான் பேசாமலிருந்து கொண்டே உனக்கு எல்லாம் செய்ய வில்லையா?'' என்று கேட்டாளாம்.

மாப்பிள்ளைக்கு வியப்பு. தன் தங்கை நன்றாகப் பேசக் கூடியவளாயிற்றே...அப்படியிருக்க, பேசாமலிருப்பதாகச் சொல்கிறாளே!

''ஏம்மா, நீ எப்போதும் நல்லாப் பேசுவியே...?''— திருப்பிக் கேட்டார்.

''நீங்கள் எல்லாரும்தான் என்னிடம் பேசிக் கொண் டிருப்பீர்கள்! நான் பேசாமல் கேட்டுக் கொண்டே இருந்து

தான் காரியங்களைச் செய்வேன். அப்படியிருக்க, பேசாமல் இருக்கிறவங்களை உனக்கு ஏன் புடிக்கலே?'' என்று கேட்டாளாம் தங்கை.

—இந்த நிலையில் கனவிலிருந்து திடுக்கிட்டு விழித்துக் கொண்டாராம் மாப்பிள்ளை.

இந்த அதிசயக் கனவைக் கண்டு வியப்பும் குழப்பமுமாய்த் தவித்த அவர் சில பெரியவர்களிடம் விளக்கம் கேட்டாராம்.

அப்போதுதான் அவர்கள், பேசாமல் இருக்கும் பெண்ணை அவர் புறக்கணித்ததைச் சுட்டிக்காட்டி, அவர் மனதை மாற்ற அம்பாளே தங்கை உருவில் கனவில் வந்ததை உணர்த்தினார்களாம்.

ஊமைப் பெண்ணின் வீட்டிற்கு அக்கணமே வந்து திருமணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டாராம் அவர்.

இந்தச் செய்தியைக் கேட்டு என் மனவெழுச்சியை என்னால் அடக்க முடியவில்லை. எனக்குக் கண்ணீர்தான் வந்தது...பேசாமல் பேசி, பிள்ளைகளைக் காத்தருளும் அந்தப் பேரருள் பெட்டகத்தை, அருள் சுரக்கும் திருப்பாதங்களை மனக்கண்ணால் போற்றி நின்றேன்...

10

கொல்லூர் மூகாம்பிகை தேவியின் அருள் பெரும் வரலாற்றில் ஒரு சிறப்பான பெருமை பெற்றது குடசாத்திரி மலை. கொல்லூர் தலம் உருவாவதற்கு ஒரு காரண கர்த்தாவாகத் திகழ்ந்த கோல மகரிஷியும், மூகாம்பிகையை பிரதிஷ்டை செய்த ஆதிசங்கரரும் அந்த மலையில் அமர்ந்து தவம் செய்ததாக ஓர் ஐதிகம்.

மேலும் இந்த மலையைப் பற்றி பாமர ரஞ்சகமாகக்கூட ஒரு கதை உண்டு...அதாவது ராமாயண காலத்தில், ஸ்ரீராமனுக்கும் - இராவணனுக்கும் போர் நடந்தபோது, இந்திரஜித்தால் தாக்கப்பட்டு விழுந்த வானர வீரர்களை உயிர்ப்பிக்க, அனுமான் கொண்டு வந்த சஞ்சீவி மலையின் ஒரு

துண்டு கீழே விழுந்ததாம். அதுதான் இந்த குடசாத்திரி மலை என்கிறார்கள்.

இச்செய்தி, குடசாத்திரி மலையின் அபூர்வ சக்தியை சிறப்பித்துக் கூறுவதற்காகக் கற்பிக்கப்பட்ட தகவலாகவும் இருக்கலாம்.

இக் குடசாத்திரி மலை, கொல்லூரில் இருந்து சுமார் பதினெட்டு மைல் தொலைவிலிருக்கிறது. சுமார் ஒன்பது மைல்கள் பஸ் மூலமாகவும், 6 மைல்கள் காட்டுப் பாதைகள் மூலமாகவும், அதன்பின் மூன்று மைல்கள் மலை ஏறியும் பயணம் செய்ய வேண்டியிருக்கும். அவ்வாறு பயணம் செய்யும்போது பக்தர்களுக்கு எவ்வித அலுப்பும் சலிப்பும் பயணக் களைப்பும் தோன்றுவதில்லை.

குடசாத்திரி மலையின் சிகரத்தின் அடிவாரப் பகுதியில் இரண்டு பழங்காலக் கோயில்கள் உள்ளன. முதல் கோயிலில் பராசக்தி, ரௌத்ர சுந்தரியான காலபைரவியாக வழிபடப் படுகிறாள். கௌல மார்க்கத்தைச் சார்ந்த சக்தி வழிபாட்டு முறைதான் இங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இச் சந்நிதியின் முன்பு உயர்ந்த இரும்புத் தூண் ஒன்று காணப் படுகிறது. இது மிகவும் புராதனமானது.

அந்த இரும்புத் தூணைப்பற்றி ஓர் ஐதீகம் கூறப்படு கிறது. ஈஸ்வரி மூகாசுவரனை அழித்த வனப்பகுதி அது தான் என்றும், அப்போது அவள் பயன் படுத்திய திரிசூலம் தான் இந்த இரும்புத்தூண் என்றும், கூறுகிறார்கள். அந்த இரும்புத் தூணில் இருக்கும் சந்நிதியில் அம்பாள், ருத்திர சொரூபிணியாக எழுந்தருளியிருப்பதற்கு நேர் எதிரிடை யாக, அங்கிருந்து சற்றுத் தொலைவில், சாந்த சொரூபிணி யாக அருளும் அழகும் திருவடிவம் கொண்ட உமாதேவி யாகக் காட்சி தருகிறாள். அங்கே வைதிக முறைப்படிதான் வழிபாடுகள் நடைபெறுகின்றன.

(இப்பகுதிக்குச் செல்லும் பயணிகளுக்காகச் சில விசேஷத் தகவல்கள் : இத்துணை தொலைவு மலைப்பகுதியில் உள்ள இடத்தில், உணவுக்காக ஏதேனும் பிரச்சினை ஏற்படுமோ என்று யாரும் சிந்திக்க வேண்டாம். அங்கே

கோயிலைச் சார்ந்திருக்கும் புரோகிதர்களின் இல்லங்களில், உணவு வழங்கப்படுகிறது. அவர்கள் தங்குமிடமும் தருகிறார்கள். நியாயமான அன்பளிப்புத் தொகையுடன் இந்த வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.)

இந்த ஆலயங்கள் அமைந்த பகுதியிலிருந்துதான் குடசாத்திரி மலைச் சிகரத்திற்குச் செல்லும் செங்குத்தான மலைப் பாதை தொடங்குகிறது. அங்கிருந்து, இரு பாதைகள் வலதுபுறமொன்றும், இடதுபுறமொன்றுமாக அமைந்திருக்கின்றன.

வலதுபுறத்தில் சிறிது தொலைவு நடந்தால், கணபதி குகையை அடையலாம். அங்கே புராதனமான கணபதி விக்ரகம் ஒன்று இருக்கிறது. இங்குதான் 'சர்வக்ஞய பீடம்' எனக் கூறப்படும் மண்டபம் இருக்கிறது. அங்குதான் ஆதிசங்கர பகவத்பாதாள் 'சர்வக்ஞய பீடம்' ஏறியதாகக் கூறுகின்றனர். (இந்தச் செய்தியில் ஒரு மாற்றுத் தகவலும் உண்டு. காஷ்மீரில் உள்ள சர்வக்ஞய பீடத்தில்தான் ஆதி சங்கரர் ஏறியிருக்க வேண்டும் என்ற தகவலே அது.)

இவை எவ்வாறாயினும், இத்தலத்தில் ஆதிசங்கரரின் திருப்பாதங்கள் பட்டதோ, அவருடைய அருள்திறன் அம்பிகையின் அருளை இப் பூதலத்துக்கு இப்புண்ணிய தலத்தின் மூலம் இறங்கச் செய்ததோ, நிலைபெற்ற உண்மை.

குடசாத்திரி மலையில் உள்ள இக்கணபதி மண்டபத்தில் சித்திரமூலை என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கேதான் கோல மகரிஷியும் ஆதிசங்கர பகவத் பாதாளும் அருட்தவம் மேற்கொண்டார்கள்.

இம் மண்டபத்தைத் தாண்டிச் செல்லும் மலைப்பாதையின் எல்லையில் 'அம்பாவனம்' என்ற பகுதி இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் இயற்கையின் மறை பொருள்களை மர்மமாகத்தேக்கிவைத்திருக்கும் அப்பகுதிக்கு பொதுவாகச் செல்வதில்லை. அந்த அச்சமூட்டும் வனப்பகுதி அம்பிகையின் காலபைரவித் திருத்தோற்றம் போல், மனதுள் அதீத கிளர்ச்சியைத் தோற்றுவிக்கிறது.

இப் புனித மலையில் நின்று, தூரத்தில் திருக்காட்சியாகும் மூகாம்பிகை அம்பாளின் கோயிலைத் தரிசிப்பது மெய் சிலிர்க்க வைக்கும் ஓர் உன்னத அனுபவம். அந்த இயற்கையின் பரவசமான சூழ்நிலையில் இறைவன்—இறைவியின் பொற்பாத கமலங்களைத் தொழுது நிற்கும்பேறு, வாழ்வில் ஒரு மகத்தான அனுபவ காலக்கூறு. அந்த அனுபவத்தைப் பெறுவதற்காகவே—இயற்கையன்னையின் அரவணைப்பிலிருந்து அம்பிகையைத் தொழுவதற்காகவே, நாம் எத்தனை அற்ப இன்னல்களையும் பொருட்படுத்தாது அந்த குடசாத்திரி மலையில் ஏறி, 'சர்வக்ஞ பீடம்' அமைந்திருக்கும் கணபதி மண்டபத்திலிருந்து இறைவழிபாடு நடத்தலாம்.

அம்பிகையின் ஆலயத்துக்கு, இயற்கையின் அரணாக குடசாத்திரி மலை சூழ்ந்து நிற்கும்போது, அவளுடைய திருப்பாதங்கள் அருகே சௌபர்ணிகையாறு சலசலத்து ஓடும். அச் சௌபர்ணிகையாற்றில் நீராடி சங்கல்பம் செய்து கொண்ட பின்னரே அம்பாளின் ஆலயத்துக்குள் செல்வது முறையான நியமம் ஆகும்.

இந்த சௌபர்ணிகையாறு மூலிகைகள் நிறைந்த வனப் பிரதேசத்தில் பாய்ந்து வருவதால், அவ்வாற்று நீருக்கு சகல வியாதிகளையும் போக்கும் மருந்துச் சக்தி உண்டாம். தொடர்ந்து ஒரு மண்டல காலம் அந்த ஆற்றில் காலையிலும் மாலையிலும் நீராடினால், அம்பாளின் அனுக்கிரகத்தால் பல வித நோய்கள் குணமாகும் என்கிறார்கள்.

அம்பிகையின் ஆலயத்துக்கு எதிரே, வடக்கு நோக்கி ஓடும் ஓர் ஆற்றிற்கு, 'அக்கினித் தீர்த்தம்' என்று பெயர் வழங்குகிறது. இது அத்திரி மகிரிஷியின் யாககுண்டத்திலிருந்து தோன்றியது என அத் தல வரலாறு கூறுகிறது. இஃதன்றி கொல்லூரிலிருந்து சுமார் பதினைந்து மைல் தொலைவில் தென்கிழக்கே காடுகளுக்கு இடையே ஒரு நீர் விழ்ச்சி அமைந்திருக்கிறது. அதைக் 'கோவிந்த தீர்த்தம்' என்று குறிப்பிடுகிறார்கள்.

கோயிலிடிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் தென் மேற்கே இன்னொரு தீர்த்தம் அமைந்திருக்கிறது. இதன்

பெயர் 'சுக்ல தீர்த்தம்.' இந்தத் தீர்த்தத்துக்கு ஒரு விசேஷம், அதன் அருகேயுள்ள மற்ற கிணறுகளின் நீர் நிலையைவிட நீர்மட்டம் அதிக உயரத்தில் இருக்கிறது. மூகாசுரனுக்கும் அம்பிகைக்கும் போர் நடக்கையில் தேவியின் திருப்பாதங்களைச் சுத்திகரிப்பதற்காகவே பாதாள கங்கையிலிருந்து இத்தீர்த்தம் தோன்றியதாகக் கூறுகிறார்கள். இத்தீர்த்தத்தில் காணப்படும் ஈஸ்வர லிங்கம், சுக்ராச்சாரியாரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அம்பாளின் திருக்கோயிலைச் சுற்றி அமைந்திருக்கும் தெய்வீக தீர்த்தங்களையும்-மலையமைப்மையும் சற்று விளக்கமாகவே நான் கூறியிருப்பதற்குக் காரணம், இத்தலத்தை நேரில் சென்று பார்க்க முடியாத மெய்யன்பர்கள் அம்பாளின் ஆலயம் அமைந்திருக்கும் அற்புதமான இயற்கைச் சூழ்நிலையை ஓரளவு மனக் கண்ணாலாவது தரிசிக்க முடியுமே என்ற ஆதங்கம்தாள்.

இத்தகைய எழில் கொழிக்கும் சூழ்நிலையில் எம் அம்பிகை திருக்கோயில் கொண்டிருக்கும் இனிய காட்சியை வேறு எங்கு காண்போம்! என்னென்று எடுத்துரைப்போம்! இந்த அற்புத இயற்கைத் திருக்காட்சிகளின் கவினுறு வனப்பின் இனிய சுகம் மாந்தியவாறு என் அம்பிகையின் திருக்கோயிலினுள் அந்த தேவதேவியின் திருத்தரிசனம் காண நுழைகிறோம். அங்கே அம்பிகை நமக்கு அளிக்கும் அருட்காட்சியின் மகோன்னதம்தான் என்னே, என்னே;

11

கொல்லூர் தலத்தில் அமர்ந்து குவலயமெல்லாம் காத்து நிற்கும் எம்பேரருள் பெருமாட்டியான அம்பிகை, மூகாசுரனை வென்றதால் 'மூகாம்பிகை' எனத் திருநாமம் பெற்றாள் என்பது இதிகாச வரலாறு.

அன்னை மூகாம்பிகையின் திருநாமத்துக்கு விளக்கம் அது மட்டும்தானா?

இல்லை;

உள்ளத்தால்—அறிவால்—தகுதியால் மூங்கையராய், வாழும் நம் போன்ற எண்ணற்ற ஏழையரைக் காக்கும் வல்லமை கொண்டு, எம் அன்னை திகழ்வதாலும், அவள் மூகாம்பிகை எனும் பெயர் பெற்றுள்.

இத்தகு மூங்கையராம் பேதைமை மாந்தருக்கு வல்லமை அளிக்கும் மகா சக்தியாய், முக்காலமும் காத்து நிற்கும் மோனத் திருநாயகியாய், எம் அம்பிகை எழுந்தருளி யிருக்கும் அந்தத் திருக்கோயிலுக்குள் மெய் பணிந்து புலன்கள் தொழுது நிற்கச் செல்கிறோம்.

ஆலயத்தில் இரண்டு பிராகாரங்கள் வெளிப்பிராகாரத் தில்தான்—சரஸ்வதி மண்டபம், சண்டிஹோம மண்டபம், வீரபத்திர சுவாமி சந்நிதி, ஆதிசங்கரர் தவம் செய்த சங்கர பீடம் போன்ற புனித கேந்திரங்கள் அமைந்துள்ளன. உட்பிராகாரத்தில் அம்பாளின் சந்நிதிக்கு எதிரே தியான மண்டபம் அமைந்திருக்கிறது.

''அந்த தியான மண்டபத்தில் அமர்ந்து அம்பாளை தியானித்துக் கொண்டிருந்தால் எல்லையற்ற மன அமைதி நமக்குக் கிட்டும்'' என்கிறார் ஆலய குருக்கள்.

அதிகாலை, ஏழு மணி வாக்கில் அன்னையின் சந்நிதியில் உஷத்கால பூஜை தொடங்குகிறது. எட்டரை மணிக்குப் பிராதகால பூஜையும் ஸ்ரீபலியும். அப்போதுதான் அவள் சந்நிதியிலே மிக அபூர்வமான திருமதுரம் வழங்கப்படு கிறது. சர்ககரை, நெய், சுக்கு கலந்த நைவேத்தியம் அது. இந்த நேரத்தில் நிகழும் அம்பாளின் ஸ்ரீபலிஉலா ஓர் அபூர்வக் காட்சி. அம்பாளின் உற்சவ விக்கிரகத்தை வெளியில் எடுத்து மும்முறை உள் பிராகாரத்திலும், மும்முறை வெளிப் பிராகாரத்திலுமாக மேளதாளங்களுடன் வலம் வருவர். வெளிச்சுற்றில் இருமுறை விக்கிரகம் பல்லக்கில் எடுத்துச் செல்லப்படும். மற்றச் சமயங்களில், விக்கிரகத்தை அர்ச்சகர் ஒருவர் தலையில் சுமந்து செல்வார். அம்பாள் இவ்வாறு உலா வந்து, பிராகாரத்தில் இருக்கும் தன் பரிவார தேவதைகளுக்கு, நைவேத்திய அமுது படைக்

கப்படுவதை நேரடியாகக் கண்காணிப்பதே இந்த ஸ்ரீபலியின் நோக்கம்.

இதன்பின் மதியம் 11.30-க்கு உச்சி கால பூஜை நிகழும். 12-30-க்கு பஞ்ச பட்சம், பாயசம், சாதம் இவற்றுடன் அம்பாளுக்கு மகா நைவேத்தியம், 12.45-க்கு தீபாராதனை, ஸ்ரீபலி; ஒரு மணி அளவில் ஆலயத்தில் நடை சாத்தப்படுகிறது.

வெள்ளிக்கிழமை, பௌர்ணமி, அமாவாசை நாட்களில் இந்த பூஜா காலங்களில் சற்று மாறுதல் இருக்கலாம். மாலை 5.30 மணிக்கு மீண்டும் கோயில் திறக்கப்படும். ஏழு மணிக்குள்ளாக அர்ச்சனை, நைவேத்தியம், தீபாராதனை இவை முடிவுறும். பின்னர் மங்கள ஆரத்தி என்று வழங்கப் படும், பல்வகை தீபஆராதனை நிகழும். அதன்பின் வீரபத்திர சுவாமிக்கும், மற்றபரிவார தேவதைகளுக்கும் தீபாராதனை; தொடர்ந்து ஸ்ரீபலி பூஜை. இறுதியில் தேவியை மீண்டும் கருவறையில் வைத்து தீபாராதனை நிகழ்த்துவதோடு பூஜா கால நியமங்கள் நிறைவுபெறும். அதன்பின் ஆலயத்தில் கூடியிருக்கும் பக்தர்களுக்குக் கஷாயத் தீர்த்தம் வழங்கப் படுகிறது. சுக்கு, ஏலக்காய், மிளகு, திப்பிலி, லவங்கம், சர்க்கரை இவை கலந்த தீர்த்தம் இது. 'இந்த தீர்த்தம் மிகச் சிறப்பான மருத்துவ சக்தியுள்ளது' என்று தெரிவித் தார்கள்.

முன்பு ஒரு சமயம் கொல்லூரை அடுத்த பகுதியில் மலேரியா சுரம் பரவி வந்தபோது, இந்த தீர்த்தமே மாமருந்தாய், மக்களைக் காப்பாற்றியதாம்.

அன்னையின் சந்நிதியில் ஒவ்வொரு நாளும் திருநாளே யாயினும், தூரதூர பகுதியிலிருந்தெல்லாம் மக்கள் வெள்ள மாகக் கூடி நிகழ்த்தும் வருடாந்திர திருவிழாக்கள், இரண்டு. ஒன்று, புரட்டாசி மாதத்தில் நிகழும் நவராத்திரி திருவிழா. அடுத்தது, பங்குனி மாதத்தில் உத்திர நட்சத்திர தினத்தன்று கொடியேற்றப்பட்டு ஒன்பது நாட்கள் நடக்கும் மகத்தான பெரும் விழா. இந்தப் பங்குனி மாத விழாவில் கர்நாடக மாநிலமெங்குமிருந்து மக்கள் வெள்ளமாய்க் கூடி

அன்னையின் ஆனந்தத் திருவிழாவில் கலந்துய்வர். புரட்டாசி நவராத்திரி திருவிழாவில், கர்நாடக மக்களுடன் கேரள மக்களும் பெருமளவில் கலந்து கொள்வார்களாம்.

கி. பி. **1140**-ம் ஆண்டு, கருங்கல் கட்டட அமைப்பு கண்ட இந்த ஆலயத்துக்கு, பல்வேறு மன்னர்களும்—பிர முகர்களும் அளித்த விலையுயர்ந்த ஆபுரணங்களைப் பற்றி பெரிய பட்டியலைத் தருகிறார்கள் ஆலய நிர்வாகிகள்.

ஃ ஃ ஃ

அனைத்துக் கோடி அணிகளையும் நாணுறச் செய்யும் வண்ணம், கோடி சூரியப் பிரகாசத்துடன், அனந்தகோடி சந்திரனின் தண்ணொளியும் இணைந்து ஜொலிக்கும் அருட் புன்னகையுடன், அகிலாண்ட நாயகியாம் அன்னை மூகாம்பிகை திருக்காட்சி அருளிக் கொண்டிருக்கிறாள். மூவுலகத்தையும் புரந்து நிற்கும் மோனப்புன்னகை அவள் திருமுகத்தை அலங்கரிக்க, திருச்சிரசில் மணிமகுடம் ஒளி விட, சதுர்புஜங்களுள் மேல் வலது கரத்தில் சுதர்சன சக்கரமும், இடது கரத்தில் சங்கும், வலது—இடது—கீழ்க் கரங்கள் அபயவரத ஹஸ்த முத்திரைகளுடன் அருள்பாலிக்க பத்ம மலர்ப் பீடத்தில் அன்னை மூகாம்பிகை அமர்ந்த கோலத்தில் காட்சி தரும் பேரெழில் திருக்காட்சியை, பிறவி எடுத்த நாளனைத்தும், பார்த்துப் பார்த்துப் பரமானந்தத் தில் திளைப்போமே என்று நெஞ்சம் உருகுகிறது.

ஆதிசங்கரருக்கு அருட்காட்சியளித்து, இந்த அகிலத்தை அந்த அருள் மகான் மூலம் உய்விக்க வந்த அன்னை கலைவாணியின் திருப்பாத சலங்கையொலியில் அருள்வேதம் நான்கும் ஆனந்த கீதம் இசைக்கின்றன. சொல்லரியத் தத்துவங்களும், சித்துக்களும், அன்னையின் ஜோதிப் புன்னகையில் பிறக்கின்றன. கும்பிட்ட கரங்களுக்குள் அருட்குவிக்கும், அந்த கொல்லூர்த் திருநாயகியை மெய் சிலிர்க்க போற்றி நிற்கிறோம்...

தாயே! மும்மூர்த்திகளுக்கும் மூவுலகுக்கும், மூல ஆதர்ச மாகத் திகழும் மூகாம்பிகை தேவியே, நின் பதம் பற்ற யாம் பெற்ற பேறு என்னே, என்னே! எம் பாவப் பிணி நீக்கி,

பாருலகில் உய்விக்க நின் பத்மமலர் பாதங்களில் ஓர் சிறு அசைவு செய்திட்டால் போதாதோ! சூழ்ந்து நிற்கும் வல்வினைகள் சூருவளிப் புழுதியாய் சுழன்றோடி நீங்காதோ! கொல்லூரில் கொலுவமர்ந்த எங்கள் குலநாயகியே, அல்லல் தனை நீக்கி, நின் அருளொளியால் எமை ஆண்டு இன்னமுத ஏற்றங்களை எம் வாழ்வில் ஏற்றுவித்துக் காத்திடுவாய், கனகவல்லி! கற்பகமே! பொற்புடைத் திருவே! புலர் ஒளியே! பொன் மகளே! பாழும் பிறப்பறுக்க பார்வையால் அருள் சுரக்கும் ஏழுலக நாயகியே, ஈஸ்வரியே! மாதாவே! பற்றி நின்றோம் நின் அருட்பாதம்! போற்றி செய்தோம் நின் திருவருளை! போற்றி! போற்றி!

கொல்லூர் மூகாம்பிகை அம்பாளைத் தரிசிக்கச் செல்லும் வழி...

குடசாத்திரி மலையின் அடிவாரத்தில் மங்களூரிலிருந்து ஏறக்குறைய 139 கி. மீ. தொலைவில், மைசூர் மாநிலத்தில், தென் கனரா ஜில்லாவின் வடகிழக்கு எல்லையிலிருக்கும், அழகொழுகும் கிராமமாகும் கொல்லூர். மங்களூரிலிருந்து புறப்படும் பேருந்துகள் உடுப்பி (இங்கு புகழ்மிக்க ஸ்ரீ கிருஷ்ண ஆலயம் உள்ளது), குந்தாப்பூர், பைந்தூர் போன்ற கன்னடத்து நகரங்கள் மூலமாக கொல்லூருக்கு வந்து சேருகின்றன. காலையில் 7-30, 9-00, மற்றும் மதியம் 1-45 மணிக்கு மங்களூரிலிருந்து புறப்படும் பேருந்துகள்—முறையே காலை 11-00 மதியம், 2-35, மற்றும் மாலை 6-15 மணிக்கு கொல்லூரை வந்தடைகின்றன. சென்னை, ஆந்திரம், மற்றும் வடமாநிலங்களிலிருந்து வரும் யாத்ரீகர்கள் பங்களூர் வழியாகவும் கொல்லூர் வந்து சேரலாம். பங்களூரிலிருந்து குந்தாப்பூருக்கு நிறைய போக்குவரத்து வசதியுண்டு. அங்கிருந்து கொல்லூருக்கு பேருந்து வசதி எளிதில் கிடைக்கும். ஷிமோகாவிலிருந்து தினசரி ஒரு

பேருந்து கொல்லூருக்குச் செல்கின்றது. சிருங்கேரியிலிருந்து சோமேஸ்வரம் வழியாக ஹாலாடியை வந்தடைந்தால் அங்கிருந்து கொல்லூருக்கு பேருந்து வசதி கிடைக்கும். கேரளாவிலிருந்து வருகின்ற யாத்திரீகர்களுக்காக ஒரு நாள் விட்டு ஒரு நாள் கண்ணனூரிலிருந்து நேரடியாகப் பேருந்து போக்குவரத்துண்டு.

பூஜா கட்டணம் மற்றும்
விவரங்களுக்கு

The Executive Officer,
Sir Moogambigai Temple,
Kollur Post,
***(Via)* Kundapur,**
S. Kanara

என்ற முகவரிக்கு எழுதிக் கேட்கலாம்.

பலவித துன்பம் நீக்கும் ஸ்தோத்திரங்கள்

[அம்பிகையை உள்ளன்போடு—முழுமனதோடு பிரார்த்தனை செய்தால் தீராத பிரச்சினைகளே இல்லை. சௌந்தர்யலஹரி அம்பிகையின் முழு சக்தியையும் பிரதி பலிக்கக் கூடியது. அஷ்டமாசக்தியையும், அறுபத்து நான்கு கலைகளையும், பதினாறு பேறுகளையும், பிறவிப் பெரும் பயனை யும் பெறலாம். முக்கியமான சிலவற்றை கீழே கொடுத்திருக் கிறோம். பக்தர்கள் படித்துப்பயன் பெற பராசக்தி அருள் புரியட்டும்.]

1. [பேச்சில் திக்கல் இருந்தால் நீங்க, பேச்சுத் திறமை அதிகரிக்க.]

த்வதீயம் ஸௌந்தர்யம் து ஹின கிரி, கன்யே துலயிதும்
கவீந்த்ரா : கல்பந்தே கதமபி விரிஞ்சி-ப்ரப்ருதய : |
யதாலோ கௌத்ஸுக்யா-தமரலலனா யாந்திமனஸா
தபோபிர்-துஷ்ப்ரா பாமபி கிரிச-ஸாயுஜ்ய பத வீம் ||

[இமவத்புத்திரி! நினைத்தவுடன் கோடி கவிதைகளை மழையாகப் பொழியும் கவிஞர்களும், சரஸ்வதியை நாவில் தரித்திருக்கும் பாக்கியம் பெற்ற நான்முகனும்கூட உன் அழகுக்கு உதாரணம் தேடி கற்பனை செய்து தோல்வியுற்று விட்டார்கள். பரமசிவனின் கண்ணல்லாமல் வேறு கண்கள் உனது முழு அழகையும் கண்டதில்லை. உனது சந்தோஷமான நேரத்தில் என்னை நினைத்து அள்ருபுரிவாய் அம்மா!]

* * *

2. [எத்துறையாயினும்புகழை விரும்புபவர்கள்சொல்ல வேண்டிய ஸ்லோகம்.]

வஹத்யம்ப ஸ்தம்பேரம—தனுஜ-கும்பப்ரக்ருதிபி :
ஸமாரப்தாம் முக்தா மணிபி-ரமலாம் ஹாரலதிகாம் |
குசாபோகோ பிம்பாதர-ருசிபி.ரந்த : சபலிதகாம்
ப்ரதாப-வ்யாமிச்ராம் புரதமயிது : கீர்த்திமிவதே ||

[அம்மா! யானையின் தலையில் தோன்றும் முத்து கர்ப்பூர வர்ணம் உள்ளது. கஜாசுரனை வதைத்த பின் அவன் தலையில் உள்ள முத்துக்களை எடுத்து தேவிக்கு மாலையாகப்

பரிசளித்தார் ஈசன். அதில் தேவியின் உதட்டுச் சிவப்பு பிரதிபலித்து மாலை ஒரு பக்கம் பார்த்தால் சிவப்பாகவும், மறுபக்கம் வெள்ளையகாவும் ஜொலிக்கிறது. சிவப்பு வீரத்திற்கும் வெண்மை புகழுக்கும் அடையாளம். அந்த இரண்டையும் தேவி நீ எனக்கு அளவில்லாமல் தரவேண்டும்.]

* * *

3. [பேய், பிசாசு அண்டாதிருக்க, தனி வழி செல்லும் போது ஜபிக்கவும்.]

நமோ-வாகம் ப்ரூமோ நயன-ரமணீயாய பதயோ :
தவாஸ்மை த்வந்த்வாய ஸ்புட-ருசி ரஸாலக்தகவதே
அஸூயத்யத்யந்தம் யதபிஹனனாய ஸ்ப்ருஹயதே
பசூனா - மீசான : ப்ரமதவன-கங்கேலி-தரவே.

[மருதாணியால் சிவந்த பாதங்களை உடைய பராசக்தி மலட்டு அசோக மரமும் உன் பாதம் பட்டால் புஷ்பிக்கின்றது. உன்பட்டுப் பாதங்களை வருட பரமசிவன் ஆசைப் படுகிறார். அந்தப் பாதங்களால் பைசாசங்களை எட்டி உதைத்து என்னை ரட்சிப்பாயம்மா!]

* * *

4. [பெண்களுக்கு விரைவில் விவாகம்நடக்க, மலட்டுத் தனம் நீங்க.]

சதுர்ப்பி :ஸ்ரீ கண்டை : சிவயுவதிபி : பஞ்ச பிரபி
ப்ரபின்னாபி : சம்போர்-நவபிரபி மூலப்ரக்ருதிபி : |
த்ரயஸ் சத்வாரிம்சத்-வஸூதல-கலாச்ர-திரிவலய
த்ரிரேகாபி : ஸார்தம் தவ சரண கோனா :
பரிணதா ||

[ஒன்பது முக்கோணங்களால் ஆன ஸ்ரீ சக்கரத்தில் வீற்றிருப்பவளே! சுற்றி எட்டிதழ் கமலம், பதினாறிதழ் கமலம், மூன்று வட்டங்கள், மூன்று கோடுகள், நாற்பத்து நான்கு கோணங்களை உடைய ஸ்ரீ சக்கரத்தை என்னால் வர்ணிக்க இயலுமோ? நீ நினைத்தால் ஆகாத காரியமும் உண்டோ?]

* * *

5. [இளமை அங்கப் பூரிப்புக் குறைவாக—எடுப்பான தோற்றப் பொலிவின்றி இருக்கும் பெண்கள் பொலிவான தோற்றம் பெற கர்ப்பிணிகள் அழகான குழந்தைகளைப் பெற சொல்ல வேண்டிய ஸ்லோகம்.

குசௌ ஸத்ய : ஸ்வித்யத்-தடகடித-கூர்ப்பாஸபிது ரௌ
கஷந் தௌதோர்-மூலே கனக-கலசாபௌரகலயதா |
தவ த்ராதும் பங்காதலமிதி வலக்னம் தனுபுவா]
த்ரிதா நந்தம் தேவி த்ரிவலி லவலீ.வல்லிபிரிவ ||

[பரமசிவனுடைய பெருமைகளை நினைத்த மாத்திரத்தில் விம்மிதமுற்று மார்க் கச்சையைக் சிழித்து விடுமோ என்று எண்ணும்படி பூ ரி த் து விளங்கும் பொற்குடங்களைப் போன்ற தனங்களின் பாரத்தினுல் உனது மெல்லிய இடை ஒடிந்துவிடக் கூடாதென்றுதான் அதில் மூன்று மடிப்புக்கள் உள்ளனவோ? அம்மா காத்யாயிணி! அந்த சௌந்தர்யத்தில் ஒரு துளியை என்னிடம் செலுத்தும்படி பணிந்து கேட்கின்றேன்.]

* * *

6. [எப்படிப்பட்ட ஜுரமாயிருந்தாலும் சொல்லச் சொல்ல ஜுரம் குறைந்துவிடும். நிறுத்தாமல் சொல்ல வேண்டும்.]

ஸுதா மப்யாஸ்வாத்ய ப்ரதிபய-ஜராம்ருத்யு-ஹரிணீம்
விபத்யந்தே விச்வே விதி-சதமகாத்யா திவிஷத : |
கராலம் யத் க்ஷ்வேலம் கபலிதவத: காலகலனு
ந சம்போஸ் தன் மூலம் தவ ஜனனி தாடங்க-மஹிமா ||

[வயோதிகத்தையும், மரணத்தையும் ஜெயிக்கிற அமிருதத்தைச் சாப்பிட்டும் தேவர்களும், இந்திரனும் பிரும்மாவும் பிரளய காலத்தில் அழிந்து விடுகிருர்கள். ஆனல் விஷத்தைச் சாப்பிட்டும் நீலகண்டன் நித்திய யௌவன புருஷராய் விளங்கக் காரணம் காலத்தைக் கணக்கிடும் சூரிய சந்திரர்கள் தாடங்கமாய் உன் காதிலே அடங்கிக் கிடப்பதுதான்! அப்படிப்பட்ட தேவி எனக்கு அனுக்கிரகம் புரியட்டும்.]

* * *

7. [அம்மை நோய் குணமுடைய, முத்துக்கள் அதிகமாக இருந்தால் தினம் காலையில் இறங்கும்வரை ஜபம் செய்வது அவசியம்.]

கவீனும் ஸந்தர்ப்ப-ஸ்தபக-மகரந்தைக-ரஸிகம்
கடாக்ஷ-வ்யாசேக்ஷப-ப்ரமர-கலபௌ கர்ணயுகலம்
அமுஞ்சந்தௌ த்ருஷ்ட்வா தவ நவரஸாஸ்வாத-தரலௌ
அஸூயா-ஸம்ஸர்க்கா-தலிகநயனம் கிஞ்சி தருணம் |

]பக்தர்கள் பொழியும் நவரஸக் கவிதைகள் அம்பிகையின் காதுகள் வழியே பாய்கின்றன. அந்த தேனமுதைப் பருக ஆசை கொண்டவைபோல் தேவியின் வண்டுகளைப் போன்ற விழிகள் காதைத் தொடுவதுபோல் நீண்டிருக்கின்றன. அந்தக் கண்களைக் கண்டு பொறுமை கொண்டதால் நெற்றிக்கண் சிவந்து காணப்படுகின்றதோ? அல்லது எம்போன்ற அன்பர்களின் வேதனைகளைத் தாங்கிக் கொள்வதாலிருக்குமோ?]

* * *

8. [கண்களில் உண்டான உபாதைகள் நீங்க, ஆபரேஷன் முடிந்து பார்வை தெளிவாகத் தெரியச் சொல்ல வேண்டிய ஸ்தோத்திரம்.]

தவாபர்ணே கர்ணே ஜபநயன—பைசுன்ய - சகிதா
நிலீயந்தே தோயே நியத - மநிமேஷா: சபரிகா: |
இயஞ் ச ஸ்ரீர் - பத்தச்சத - புடகவாடம் குவலயம்
ஜஹாதி ப்ரத்யூஷே நிசிச விகடய்ய ப்ரவிசதி ||

[பக்தர்களின் பூஜைகளை கடன் வைத்துக் கொள்ளாமல் அப்போதைக்கப்போது வரமாய்கொடுத்து அனுக்கிரகிக்கும் மீனாட்சி! உனது விழிகளை தங்களுக்குப் போட்டியாக வந்ததோ என மீன்கள் நினைப்பதால்தான் விழி மூடாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றனவோ? அந்தக் கண்களின் அருள் ஒரு துளி என்மீது பட்டாலும் போதும் அம்மா.]

* * *

9. [கல்வி, சங்கீதம், வீணை போன்ற லலித கலைகளில் திறம்பட விளங்க.]

அவிச்ராந்தம் பத்யுர் - குணகண - கதாம்ரே டனஜபா
ஜபா புஷ்பச்சாயா தவஜனனி ஜிஹ்வா ஜயதி ஸா |
யதக் ராஸிநாயா : ஸ்படிகத்ருஷ - தச்சச்சவி - மயி
ஸரஸ்வத்யா மூர்த்தி : பரிணமதி மாணிக்யவபுஷா ||
[பரமசிவனின் கலியாண குணங்களை, வரலாறுகளை சதா பேசிக் கொண்டே இருப்பதால் சிவந்திருக்கும் நாவை உடைய நாகேஸ்வரி! உன் நாவின் காந்தியில் ஒரு துளியை என்மீது பிரயோகிக்க வேண்டுகின்றேன்].


* * *

10. [லட்சுமி கடாட்சம் பெற]
நகாஞ - முத்யோதைர் - நவநலின - ராகம் விஹஸதாம்
கராஞம் தே காந்திம் கதய கதயாம : கதமுமே: |
கயா சித்வா ஸாம்யம் பஜது கலயா ஹந்த கமலம்
யதி க்ரீடல்லக்ஷ்மீ-சரண -தல - லாக்ஷா - ரஸ—சணம் =
[அதோ மலர்கின்ற செந்தாமரைகூட உனது நகங்களின் சிவந்த ஒளியைக்கண்டு நாணி நிற்கின்றது. ஏ, செந்தா மரையே...லட்சுமி தேவியின் பாதத்திலிருக்கும் செம்பஞ்சுக் குழம்பால் நீயும் கொஞ்சம் பிரகாசத்தைக் கடன் வாங்கிக் கொள்...அப்படியே என்னைப் பற்றியும் சொல்வாய்.]

* * *

11. [உத்யோக உயர்வு பெற, வேலை கிடைக்க சொல்ல வேண்டிய ஸ்தோத்திரம்]
கரீந்த்ராஞம் சுண்டான் கனககதலீ—காண்டபடலீம்
உபாப்யா மூருப்யா - முபயமபி நிர்ஜித்ய பவதி |
ஸுவ்ருத்தாப்யாம் பத்யு : ப்ரணதி கடிஞப்யாம் கிரிஸுதே
விதிஜ்ஞே ஜானுப்யாம் விபுத - கரிகும்ப - த்வய - மஸி ||
[யானையின் துதிக்கையையும், புதிய, பருத்த பொன் நிறமுள்ள வாழை மரத்தையும் தோற்கடிக்கச் செய்யும் தொடையழகு படைத்த தயாபரி! புருஷனை தினம் வணங்கு வதால் உனது முழங்கால்கள் இறுகி உருண்டையாய் இருக் கின்றன. இந்த உலகத்தில் நான் முன்னணியில் இருக்க நல்லதொரு பதவியைக் கொடுப்பாயம்மா!]

* * *


மணிவேல்


மணிவேல்